ஜனநாயக செயல் கட்சி

# அரசியலமைப்பு

01.11.2022 உள்ளது போல்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பிரிவு I | கட்சியின் பெயர், முகவரி, மற்றும் சின்னம் | 5 |
| பிரிவு II | கட்சியின் நோக்கங்கள் | 5 |
| பிரிவு III | உறுப்பியம் | 8 |
| பிரிவு IV | உறுப்பிய நிபந்தனைகள் | 8 |
| பிரிவு V | கட்டணம் | 11 |
| பிரிவு VI | கட்சியின் உறுப்பியத்திலிருந்து விலகுதல் | 12 |
| பிரிவு VII | கட்சி கட்டொழுங்கு | 12 |
| பிரிவு VIII | கட்சிப் பேரவை | 14 |
| பிரிவு IX | கட்சி மாநாடு | 18 |
| பிரிவு X | கட்சி நிர்வாகம் | 19 |
| பிரிவு XI | கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் கடமைகள் | 21 |
| பிரிவு XII | கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அதிகாரங்கள் | 22 |
| பிரிவு XIII | நிரந்தர உறுப்பிய துணை செயற்குழு | 28 |
| பிரிவு XIV | மாநில செயற்குழு | 29 |
| பிரிவு XV | மாநில மாநாடு | 34 |
| பிரிவு XVI | மாநில வருடாந்திர மாநாடு | 38 |
| பிரிவு XVII | நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு நியமித்தல், கலைத்தல் | 39 |
| பிரிவு XVIII | நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு ஆண்டுப் பொதுக்கூட்டம் | 39 |
| பிரிவு XIX | நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு | 41 |
| பிரிவு XX | கிளைகளை நியமித்தல் மற்றும் கலைத்தல் | 43 |
| பிரிவு XXI | கிளைகளின் ஆண்டுப் பொதுக் கூட்டம் | 45 |
| பிரிவு XXII | கிளைகளின் செயற்குழு | 47 |
| பிரிவு XXIII | கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் கடமைகள் | 47 |
| பிரிவு XXIV | கிளைகள் சம்பந்தப்பட்ட பொது மானியங்கள் | 49 |
| பிரிவு XXV | கிளைகளின் நிதி மற்றும் கணக்கறிக்கைகள் | 49 |
| பிரிவு XXVI | அரசியல் சட்டத்திட்டங்களில் திருத்தங்கள் | 51 |
| பிரிவு XXVII | கணக்காய்வு | 51 |

| | | |
|---|---|---|
| பிரிவு XXVIII | பொறுப்பாளர்கள் | 51 |
| பிரிவு XXIX | கட்சி கலைத்தல் | 52 |
| பிரிவு XXX | பொது விவகாரங்கள் | 52 |
| முதல் பட்டியல்<br>கட்சியின் பேரவை மற்றும் மாநாட்டின் நிரந்தர விதிமுறைகள் | | 54 |

# பிரிவு I:
# கட்சியின் பெயர், முகவரி மற்றும் சின்னம்

1. இந்தக் கட்சியின் பெயர் மலேசிய ஜனநாயக செயல் கட்சியாகும்.
2. “பதிவுப் பெற்ற அலுவலகம் மற்றும் கூட்டங்கள் நடைப்பெறும் இடத்தின் முகவரி ஜனநாயக செயல் கட்சி தலைமையகம், ஜாலான் யியு, ஒ ப் ஜாலான் புடு, 55100 கோலாலம்பூர் அல்லது மத்திய செயலவையினர் முடிவெடுக்கும் வேறு இடங்கள். அமைப்புகள் பதிவு துறையின் முன் அனுமதி இல்லாமல் பதிவு செய்த கட்சியின் முகவரியை மாற்ற முடியாது.
3. கட்சியின் சின்னம், ஒரு நீல நிற வட்டம், அதன் பின்னனியானது வெள்ளை நிறத்திலும் மற்றும் அதற்கு மேல் சிவப்பு ஏவுகணை அந்த நீல வட்டத்தில் நேராக இருக்கும்.

# பிரிவு II:
# நோக்கங்கள்

## முன்னுரை:

சுதந்திர அரசியல் சட்ட அமைப்பு என்பது ஒரு நாட்டின் ஜனநாயகத்தையும்சுதந்திரத்தையும், சட்டதிட்ட வழிமுறையும், மனித உரிமைகளை மதிக்கவும் உள்ளடக்கிய ஓர் உண்ணதமான ஆவணம். ஏனேனில், இந்த பத்திரத்தில் ஒரு நாட்டிற்குத் தேவையான பொறுப்புணர்ச்சி, நீதியை நிலை நாட்டுதல், அனைவருக்கும் சம உரிமை மற்றும் மனித உடமைகளையும் காக்க இந்த ஆவணம் மிக அத்தியாவசியமான ஒன்றாகும்.

இந்த முக்கிய அம்சங்களானது நம் நாட்டின் சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் ஒரு மிக சிறந்த பாலமாகும். குறிப்பாக பல இனம், மதம், கலாச்சாரத்தோடு வாழும் சமுதாயத்தின் ஒற்றுமைக்கு இந்த ஆவணம் ஒரு சிறந்த சான்றாகும். அதுமட்டுமில்லாமல், தீபகற்ப மலேசியா, சபா மற்றும் சரவாக் ஆகியவற்றை ஒன்றிணைப்பதற்கு மிக முக்கியமான ஆவணமாகும்.

மேற்கண்ட இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு, மலேசிய மக்கள் ஜனநாயகம் மற்றும் பொருளாதரத்தில் சமமான வளர்ச்சி; அடக்குமுறை இல்லாத சுதந்திரம்; முடிவு சமத்துவத்தை விட வாய்ப்பு சமத்துவத்திற்கு முன்னுரிமை; சமூக நீதிக்காக சட்ட இறையாண்மை; செல்வங்களைப் பெருக்கி அந்தச் செல்வங்களைச் சமமாகப் பங்கிட்டுதல்; லஞ்சம் இல்லாத பொருளாதர வளர்ச்சி போன்றவற்றை அடைய முடியும்.

## நோக்கங்கள்:

1. சமுதாய நலன்களைக் கருதி அதனை ஜனநாயக வழியில் நாடாளுமன்ற அரசியல் சட்டத்திட்டங்களின் துணை கொண்டு ஓர் உண்ணதமான சமூகத்தை உருவாக்குதல்;
2. இந்நாட்டின் உண்மை அரசியல் அமலாக்கச் சட்டத்தை தெளிவாக உணர்ந்து மக்களின் சம உரிமைகளைக் கற்று, நீதி மற்றும் சமமான ஆட்சி வழங்குதல்;
3. சபா மற்றும் சரவாக் மக்களுடன் ஒற்றுமையைப் பேணி அவர்களின் அனைத்து உரிமைகளை மதித்து மற்றும் அனைத்து இனத்தினரிடமும் ஒற்றுமை மற்றும் தேசியப் பற்றை உருவாக்கி ஒன்றிணைந்த ஒற்றுமையான மலேசியர்களை உருவக்குதல்
4. மத உரிமையை ஏற்றுக் கொண்டு அம்மதங்களின் சுதந்திரம் சட்டத்தினாலும் அடக்குமுறையினாலும் குழைந்து போகாமல் இருப்பதை நிலைநாட்டுதல்;
5. மலாய் மொழியே நாட்டின் தேசிய மொழியாய் உறுதி படுத்தி அதே சமயத்தில் இந்நாட்டில் உள்ள மற்ற மொழிகளான சீனம், தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற தாய் மொழிகளையும் கற்க, வளர்க்க, பயன்படுத்ததை பாதுகாத்து நிலைநிறுத்துதல்;
6. கடமை, கண்ணியம் மற்றும் மக்கள் நியாயத்தை முக்கியக் கோட்பாடாக கொண்டு மக்களின் வேறுபட்ட இனம், மொழி மற்றும் கலாச்சாரத்தைப் புரிந்து தெளிர்ந்து அதன்படி திறந்த மனதோடு செயல்படுதல்;
7. சுதந்திர நாடான மலேசியாவை மதித்து அதன் தனித்தன்மையை மற்றும் சிறப்பைப் பேணிக் காத்து அதனை வளர்த்தல்;
8. ஆசியான் வட்டாரத்தை ஒரு சிறந்த தலைமைத்துவ வட்டாரமாகவும் ஜனநாயக ஆட்சி முறை நடைப்பெறும் இடமாகவும் பிரகடணப்படுத்தி எல்லா மனித உரிமையை மதித்து இந்த வட்டாரத்தை அமைதியான மற்றும் அணு ஆயுதங்களின் தாக்கம் இல்லாத பகுதியாக்குதல்;

9. ஜனநாயக ஆட்சியை எல்லா நிலைகளிலும் உள்ள மக்களுக்கு பிரகடனப்படுத்தி, விரிவுப்படுத்தி மீண்டும் நகராட்சி மன்ற தேர்தல்களை நிலை நாட்டுதல் மூலம் மக்கள் ஆட்சி மேம்படுத்தப்பட்டு சமத்துவம், சுதந்திரம், நேர்மையான தேர்தல் முறை மற்றும் பத்திரிக்கை சுதந்திரம் போன்ற கொள்கைகளை நிலை நாட்டுதல்;

10. போட்டி மிகுந்த வணிகத்தை உருவாக்கி வாய்ப்பளித்தல், பொருளாதார வளர்ச்சியை அனைத்து நிலையில் உள்ள மக்களுக்குச் சமமாக பகிர்ந்து அளிக்கப்படுதல்;

11. கல்வியின் தரத்தை உயர்த்தி அனைத்து விதமான கல்வி நிலைக்கு சம வாய்ப்பு மற்றும் முக்கியத்துவத்தை வழங்குதல் மற்றும் அதே சமயத்தில் எல்லா நிலையிலும் உள்ள மக்களுக்கும் இந்த கல்வியானது 'மேரிட்' திட்டத்தில் போய்சேர உறுதிப்படுத்துதல். வரும் காலங்களில், மேலும் பல தொழில்நுட்பம் சம்பந்தமான கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்;

12. தொழிலாளர் மற்றும் தொழில் சங்கங்களைப் பாதுகாத்து வேலை செய்வதற்கான உரிமை, நியாயமான சம்பளம் மற்றும் உண்மையான சம்பளம் பராமரிக்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை சிறப்பாக இருப்பதை உறுதிப்படுத்துதல்;

13. கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில்துறையில் உள்ள அனைத்துவிதமான பெண்கள் ஒதுக்குமுறையை குழைக்கச் செய்தல்;

14. இளைய தலைமுறைக்கு வாய்ப்புகளையும் தேவைகளையும் வழங்கி அவர்களுக்கு கடமை, பொறுப்புணர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்;

15. அனைவருக்கும் நீதி மற்றும் பாதுகாப்புக் கிடைக்க வழிவகுத்தல்;

16. இலஞ்சம் மற்றும் ஊழலை முற்றிலும் ஒழித்து அரசாங்கத்துறையில் நீதி மற்றும் ஒழுக்கத்தை நிலைநிறுத்துதல்;

17. எல்லா நிலை மக்களுக்குச் சிறந்த மற்றும் மலிவான பொது மருத்துவ வசதிகளை வழங்கி எல்லாரும் அதனைப் பயன்படுத்த வழி செய்தல்;

18. இயற்கை வளங்கள் அழிவதைத் தடுத்து அதனை பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து சுத்தமான, சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழலை மக்களுக்குத் தருதல்.

# பிரிவு III:
# உறுப்பியம்

1. கட்சியின் உறுப்பினர்கள்,தலைமைப் பொறுப்பை வழிநடத்தும் அதிகாரிகள், அனைத்து ஆலோசகர்களும் இந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றிருக்க வேண்டும்.
2. 17 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு குடிமகனும் கட்சியின் உறுப்பிய நிபந்தனைகளை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு மேலும் அவர் வேறு எந்த கட்சி அல்லது அரசியல் சம்பந்தப்பட்ட கழகங்களிலும் உறுப்பியம் இல்லாதவராக இருந்தால் கட்சி உறுப்பினராகலாம்..
3. கட்சியின் எந்த ஒரு உறுப்பினரும் மற்றோரு கட்சி அல்லது அரசியல் சம்பந்தமான கழகங்களில் உறுப்பினராக சேர்ந்தால் அவருடைய உறுப்பியம் உடனடியாக ரத்துச் செய்யப்படும்.
4. மக்களவையில் பிரதிநிதியாக இருக்கும் எந்தவொரு கட்சி உறுப்பினரும், நாடாளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட செனட்டர்கள் அல்லது மலேசிய கூட்டமைப்பில் உள்ள, மாநில சட்டமன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மத்திய செயற்குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு, இந்த அரசியலமைப்பின் xii இன் பிரிவு 9(j)-க்கு இணையாக பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவுக்கும் கீழ்படியாத கட்சியின் உறுப்பியம் நிறுத்தப்படும்.

# பிரிவு IV:
# உறுப்பிய நிபந்தனைகள்

1. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் சுதந்திரம் அடைந்த மலேசியா நாட்டின் கொள்கைகளை மதிக்க வெண்டும்.
2. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் கட்சியின் சட்டத்திட்டங்கள், கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் நிபந்தனைகளை அவசியமாக ஏற்றுக் கொண்டு மதித்து நடக்க வேண்டும்.
3. எழுத்து வடிவமாக கட்சி விண்ணப்பப் பாரத்தை பூர்த்திச் செய்து நிர்ணயிக்கப்பட்ட முதல் உறுப்பியக் கட்டணத்தை கட்சி மத்திய செயலாளரிடம் செலுத்த வேண்டும்.

4. அனைத்து உறுப்பிய விண்ணப்பப் பாரங்களும் பிரிவு 13-ல் குறிப்பிட்டது போல கட்சியின் உறுப்பிய துணை செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.
5. உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க கட்சி உறுப்பிய துணை செயற்குழுவினருக்கு முழுமையாக அதிகாரம் உள்ளது. அனைத்து விண்ணப்பங்களும் கட்சி கொள்கைக்கேற்ப தெளிவாகப் பரிசீலிக்கப்படும்.
6. கட்சியின் உறுப்பிய துணை செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடந்து, அந்த வாக்கெடுப்பில் குறிப்பிட்ட ஒரு விண்ணப்பத்திற்க்கு அதிக வாக்குகளும் ஆதரவும் கிடைத்தால், அவர் கட்சியின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
7. பின் கூறப்படுபவர்கள் கட்சியின் உறுப்பியம் பெற முடியாது:
   (a) புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்று நிரூபிக்கப்பட்ட ஒருவர்.
   (b) நீதிமன்றத்தால் நேர்மையற்ற அல்லது நெறிகெட்ட செயலை புரிந்த குற்றத்திற்க்காக தண்டிக்கப்பட்ட ஒருவர்.
8. கட்சி உறுப்பிய துணை செயற்குழு எந்த ஒரு விண்ணப்பத்தையும் காரணமின்றி நிராகரிக்க முழு அதிகாரம் பெற்றுள்ளது.
9. ஒருவரின் விண்ணப்பம், உறுப்பிய துணை செயற்குழுவால் நிராகரிக்கப்பட்டால் அவர் கட்சியின் மத்திய பணிக் குழுவிடம் மேல்முறையீடு செய்யலாம். கட்சி மத்திய பணிக் குழுவிற்கு உறுப்பிய துணை செயற்குழுவின் முடிவை ரத்து செய்வதற்கான அதிகாரம் உள்ளது. மத்திய பணிக் குழு, உறுப்பிய துணை செயற்குழுவின் முடிவை ஏற்றுக் கொண்டால் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவிடம் அவ்விண்ணப்பதாரர் முறையீட்டை சமர்ப்பிக்கலாம். இந்த விஷயத்தில், கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் முடிவு இறுதியானது. மேல்முறையீட்டை நிராகரிப்பதற்கு கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவும் மத்திய பணிக் குழுவும் எந்த காரணமும் கூறத் தேவையில்லை.
10. ஒருவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் கட்சி அவர்களுக்கு எழுத்துப்பூர்வமான பதிலை அனுப்பி வைக்கும். அதனுடன், அவருக்கு கட்சி சட்டத்திட்ட புத்தகம், கட்சி சின்னம் மற்றும் உறுப்பிய அட்டையும் வழங்கப்படும்.
11. உறுப்பிய விண்ணப்பத்துடன் முதல் உறுப்பிய தொகை இணைக்கப்படாவிட்டால், அவ்விண்ணப்பம் உடனடியாக கட்சி உறுப்பிய துணை செயற்குழுவால் நிராகரிக்கப்படும்.

12. ஊராட்சி மன்றத் தேர்தல், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பின் வெற்றி பெற்ற கட்சி உறுப்பினர்கள் பின் வரும் உறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

(a) அவர்களுக்குத் தரப்படும் சம்பளம் அல்லது ஊக்குவிப்புத் தொகையிலிருந்து ஒரு பகுதியை கட்சி நிதிக்குழுவிற்கு அளிக்கவேண்டும். அந்தத் தொகையின் எண்ணிக்கையை கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு நிர்ணயம் செய்யும்.

(b) அவர்கள் பதவி முடிவுற்ற பின் அவர்களின் ஓய்வூதியத் தொகையிலிருந்து ஒரு பகுதியை கட்சி நிதிக் குழுவிற்குச் செலுத்த வேண்டும். இந்தத் தொகையின் எண்ணிக்கையை கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழு முடிவு செய்யும்.

(c) கட்சியிலிருந்து விலகினால், அவர்கள் வகிக்கும் ஊராட்சி மன்ற, சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற பதவிகளிலிருந்தும் விலக வேண்டும்.

13. உறுப்பினரிலிருந்து அகற்றுதல்

(a) எந்த ஒரு உறுப்பினரும் இச்சட்டத்தின் ஏழாவது துணை பிரிவின் கீழ் கட்சி உறுப்பினர் ஆவதற்குத் தகுதி இல்லை என்பது கண்டுப்பிடிக்கப்பட்டால் அவர்கள் உடனடியாக கட்சி உறுப்பினரிலிருந்து மத்திய பணிக் குழுவால் நீக்கப்படுவர். ஆனாலும் எந்தவொரு நடவடிக்கையும் தீவிர விசாரணைக்குப் பிறகுதான் முடிவு செய்யப்படும். அந்த விசாரணையில் ஒருவர் உண்மையாக குற்றம் புரிந்து அந்த குற்றமானது அவர் உறுப்பினர் ஆவதற்குத் தடையாகும்போது, கட்சி ஒரு முடிவை எடுக்கும். இந்த விசாரணை நடத்த கட்சியின் மத்திய பணிக் குழு மூன்று பேருக்கு குறையாத ஒரு துணை சிறப்பு குழுவை அமைத்து தீவிர விசாரணைக்குப் பின்புதான், கட்சியின் மத்திய பணிக் குழுவிடம் ஒரு முடிவை எடுப்பதற்கு பரிந்துரைகள் வழங்கும்.

(b) குறிப்பிட்ட அந்த உறுப்பினர் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவிடம் மேல்முறையீடு செய்யலாம். கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் முடிவு இறுதியான முடிவாகும்.

(c) துணை பிரிவு 13(அ)-வின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்ட உறுப்பினர் அதனை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க நீதிமன்றத்திற்கு கொண்டுச் செல்ல முடியாது:

i. மத்திய உயர்நிலைச் செயற்குழு அல்லது சிறப்புத் துணை செயற்குழு எடுத்த நடவடிக்கை அல்லது முடிவு சட்ட ரீதியில் சரியானதா என்று முறையிடக்கூடாது.

ii. தன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்காக கட்சியையோ அல்லது கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு, மற்றும் சிறப்பு துணை செயற்குழுவையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ நீதிமன்றத்திற்கு இழுக்கக்கூடாது.

(d) ஒருவர்:

i. புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்று நிரூபிக்கப்பட்டால்; அல்லது

ii. திவாலாக அறிவிக்கப்பட்டால்; அல்லது

iii. ஒருவர் நேர்மையற்ற அல்லது சீரழிவு குற்றம் புரிந்ததற்க்காக எந்த ஒரு நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டால்; அல்லது,

iv. கட்சி சம்பந்தமான எந்தவொரு விசாரனையையும் கட்சியின் உள் உள்ள அனைத்து ஊடகங்களை பரிசீலிக்காமல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றால்;

அந்த உறுப்பினர் கட்சியிலிருந்து உடனே நீக்கப்படுவார்.

# பிரிவு V:
## கட்டணம்

1. கட்சி தனது வருமானத்தை வருடாந்திர சந்தா மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொடுக்கும் நன்கொடை மற்றும் கட்சியின் கொள்கைக்கு எதிராக இல்லாத சில பயன்பெறும் நிதிகளிலிருந்து பெறுகின்றன.
2. உறுப்பினரின் வருடாந்திர கட்டணம் ரிங்கிட் மலேசியா பத்து அல்லது கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழு நிர்ணயம் செய்யும் தொகையாகும்.
3. புதிய உறுப்பினரின் முதல் கட்டணம் தவிர அனைத்து வருடாந்திர கட்டணங்களும் ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஒவ்வொரு நிதியாண்டின்

முதல் மாதத்திற்குள் செலுத்தப்படும்.

4. எந்தவொரு உறுப்பினர் 2 வருடகளுக்கு மேல், வருடாந்திர கட்டணத்தைச் செலுத்தாவிட்டால், அந்த உறுப்பினர் கட்சியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார். இருப்பினும், அந்த உறுப்பினர் சரியான விளக்கத்தையும் மீதியுள்ள கட்டணங்களையும் செல்லுத்தினால், அவரது உறுப்பினர் மீட்டெடுக்க முடியும்.

5. சிறப்பு கட்டணம் அல்லது வரி கட்சி மாநாட்டின் தீர்மானத்தின் மூலம் உறுப்பினரகளிடமிருந்து வசூலிக்கலாம். கட்டணத்தைச் செலுத்தத் தவறினால், மொத்த கட்டணம் வருடாந்திர கட்டணம் போல் வசூலிக்கப்படும்.

## பிரிவு VI:
## கட்சியின் உறுப்பியத்திலிருந்து விலகுதல்

ஒருவர் கட்சியிலிருந்து விலகுவதென்றால், அவர் ஒரு மாதத்திற்கு முன்பே அறிவிப்பு ஒன்றை கொடுக்க வேண்டும். அவர் விலகும் முன் அந்த அறிவிப்பு ஒன்றை கொடுத்த தேதிவரையிலுள்ள கட்டணத்தைச் செலுத்தவேண்டும் (விலகும் அந்த ஆண்டுக்கான கட்டணமும் உட்பட).

## பிரிவு VII:
## கட்டொழுங்கு

1. (a) கட்சியில் ஏற்படும் கட்டொழுங்கு பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு மத்திய செயற்குழு ஒரு கட்டொழுங்கு செயற்குழுவை அமைக்க வேண்டும்’.

   (b) கட்டொழுங்கு செயற்குழு உறுப்பினர்கள்:

      i) ஒரு தலைவர்

      ii) 10-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் (20 பேருக்கு மேற்போகாமல்)

   (c) கட்டொழுங்கு செயற்குழுவின் உறுப்பினர்கள் மத்திய செயற்குழு நியமிக்கும்.

(d) கட்டொழுங்கு செயற்குழுவின் தலைவர் மத்திய செயற்குழு உறுப்பினராக இல்லாமலிருந்தால் மத்திய செயற்குழுவில் வாக்களிக்க முடியாத உறுபினராக நியமிக்கப்பட வேண்டும்.

(e) ஒவ்வொரு கட்டொழுங்கு விசாரணையும் மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு போன்ற எண்ணிக்கையில் உள்ள உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். தலைவர் செயற்குழு உறுப்பினர்களில் இடம் பெற்றுள்ள யாரை வேண்டுமானாலும் விசாரணை செய்வதற்கு தேர்ந்தெடுக்கலாம்.

(f) இந்த விசாரணைக்கு தலைமை வகிப்பவர் ‘தலைமை தாங்கும் உறுப்பினர்’ என்று அழைக்கப்படுவர்.

(g) தலைவர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர்கள் விசாரணை திகதி மற்றும் இடத்தை முடிவு செய்வர்.

(h) தலைவர் இல்லாத நேரத்தில் தலைமை தாங்கும் உறுப்பினர் விசாரணையை இரத்து அல்லது மற்றொரு திகதிக்கு ஒத்தி வைக்கலாம்.

(i) விசாரணை நடைப்பெறும் நேரத்தை அந்த விசாரணைக் குழுவில் பங்கெற்றிருக்கும் பெரும்பான்மையினரின் கருத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

(j) விசாரணை குழுவில் உள்ள உறுப்பினர் ஏற்றுக்கொள்ள முடிகின்ற காரணத்தால் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் தலைவர் அவருக்கு பதிலாக மற்றொரு உறுப்பினரை நியமிக்கலாம்.

2. இடைநீக்கம் செய்யப்பட்ட மாநிலக் குழு குறித்து எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும், மேலும் ஒழுக்கக் குழுவின் முடிவு குறித்து மத்திய உச்ச குழுவிடம் முறையிட அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும். மத்திய உச்ச குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

3. உறுப்பினருக்கு அபராதம் விதிப்பது, இடைநீக்கம் செய்வது அல்லது பதவி நீக்கம் செய்வது உட்பட எந்தவொரு உறுப்பினருக்கும் எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுப்பது ஒழுக்காற்றுக் குழுவின் கடமையாகும், எந்த நேரத்திலும் கட்சியின் நலனுக்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு கருதுகிறது. ஒழுங்கு நடவடிக்கை, உறுப்பினரை பதவி நீக்கம் செய்தல் குறித்து எந்தவொரு முடிவும் கூட்டத்தில் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்களை அடிப்படையாகக்

கொண்டது. ஒழுக்காற்றுக் குழுவின் கோரம் தற்போது 50 சதவிகிதத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

4. எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையிலும் இடைநீக்கம் செய்யப்பட்ட, நீக்கப்பட்ட அல்லது குற்றம் சாட்டப்பட்ட ஒரு உறுப்பினர் ஒழுக்காற்றுக் குழுவின் முடிவை மத்திய உயர் குழுவுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிப்பார். மத்திய செயற்குழுவின் முடிவு இறுதியானது.

5. எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையிலும் ஒரு உறுப்பினர் இடைநீக்கம் செய்யப்படுவதற்கோ, பணிநீக்கம் செய்யப்படுவதற்கோ அல்லது குற்றம் சாட்டப்படுவதற்கோ முன், உறுப்பினர் அவர் அல்லது அவள் இடைநீக்கம் செய்யப்படக்கூடாது, அல்லது எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையிலும் குற்றம் சாட்டப்படக்கூடாது என்பதற்கான காரணங்களைக் குறிக்கலாம்.

## பிரிவு VIII:
## கட்சிப் பேரவை

1. (a) கட்சியில் செயல்முறை கட்சியின் பேரவை மற்றும் கட்சி மாநாடு அடிப்படையில் நடைப்பெறும்.

   (b) கட்சி பேரவை, கட்சியின் தேசிய பேரவை என அழைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முடிவின் அடிப்படையில் நடைப்பெறும்.

      (i) மத்திய செயற்குழு, அல்லது

      (ii) கட்சி பேரவைக்கு பேராளர்களை அனுப்பும் தகுதியுள்ள 60% மேற்பட்ட கிளைகள் வேண்டுகோளுக்கு இணங்க, அல்லது

      (iii) 60% மேற்பட்ட கட்சி பேரவை பேராளர்களின் வேண்டுக்கோளுக்கு இணங்க.

   (c) இந்த அரசியலமைப்பில் உள்ள மற்ற கூறுகளை கருத்தில் கொள்ளாமல் 55(3) நாட்டின் அரசியலமைப்பில் குறிப்பிட்டிருப்பது போல நாடாளுமன்றம் கலைக்கப்படும் திகதி 24 மாதங்களுக்குள் இருந்தால் கட்சி பேரவை, கட்சி மாநாடு, மாநில மாநாடு, கட்சி

வருடாந்திர மாநாடுகளை ஒத்தி வைப்பதற்கு மத்திய செயற்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. ஒத்திவைக்கும் அனைத்து மாநாடு மற்றும் பேரவை தேர்தல் முடிந்து 6 மாதத்திற்குள் நடத்திவிட வேண்டும். கட்சியின் நடவடிக்கைகளை தீர்மானிப்பது கட்சி மாநாடு மற்றும் கட்சி பேரவையும்தான். கட்சியின் பேரவை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும். தேசிய பேரவை என்று அழைக்கப்படும் இப்பேரவையை கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு அல்லது பேராளர்களை அனுப்பும் தகுதி பெற்ற 50 விழுக்காடு பேராளர்களின் அழைப்பிலும் நடத்தப்படலாம். இச்சட்டத்தில் உள்ள எல்லாப் பிரிவுகளையும் கருத்தில் கொள்ளாமல் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவிற்கு மாநாட்டையும், பேரவையையும், மாநில கூட்டத்தையும், மாநில ஆண்டுக் கூட்டத்தையும் 18 மாதங்கள் வரை ஒத்தி வைக்கும் உரிமை உள்ளது. சட்ட அமைப்பு 55(3) பிரிவின்படி நாடாளுமன்றம் கலைக்கப்படும் தருவாயில் இரண்டு ஆண்டுகளில் இந்த தேதி விழுந்தால் மேல் குறிப்பிட்ட விஷயமானது நடக்கும்.

2. கட்சிப் பேரவைக்கு குறைந்தபட்சம் 25 விழுக்காடு பேரவைக்கு கலந்துக் கொள்ள தகுதியுள்ள பேராளர்களின் பங்கேற்பு தேவை.

3. (a) கட்சிப் பேரவைக்கு பேராளர்களை அனுப்ப தகுதி பெற்ற கிளைகளின் உரிமைகள்:

- தங்களது கட்டணத்தை செலுத்திய 15: 25 உறுப்பினர்கள்-1 பேராளர்
- கட்டணத்தை செலுத்திய 26-50 உறுப்பினர்கள்: 2 பேராளர்கள்
- தங்களது கட்டணத்தை செலுத்திய 51: 100 உறுப்பினர்கள்-1 பேராளர்
- தங்களது கட்டணத்தை செலுத்திய 100 உறுப்பினர்களுக்கு மேல்:

  கட்டணத்தை செலுத்திய ஒவ்வொரு 100 உறுப்பினர்களுக்கும்-1 பேராளர்

(b) நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மத்திய உயர்நிலைச் செயற்குழு உறுப்பினர்கள் இப்பேரவைக்கு பேராளர்களாக பங்கேற்கலாம்.தகுதிப் பெற்ற அனைத்து நாடாளுமன்ற தொடர்பு குழுக்களும் ஒரு பேராளரை அனுப்பலாம்.

4. கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் பதவி ஆண்டு முடியும் தருவாயில் அல்லது நிறைவுபெறும்போதுதான் இந்தக் கட்சியின் பேரவை நடத்தப்படும்.

5. கட்சி தேசிய பேரவையின் நடவடிக்கைகள் பின் கூறப்படும் முறையில்தான் நடைப்பெறவேண்டும்.

   (a) கட்சியின் தேசிய தலைவரின் வரவேற்புரை;

   (b) கட்சியின் பொதுச் செயலாளரின் தலைமை உரை;

   (c) கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் வருடாந்திர அறிக்கையை பொதுச் செயலாளர் அறிவிப்பார்;

   (d) 20 பேர் கொண்ட புதிய கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு தேர்ந்தெடுக்கப்படும்;

   (e) கடந்த கூட்டம் அல்லது பேரவையின் கூட்ட அறிக்கை சமர்பித்து அதனை ஏற்றுக் கொள்ளுதல்;

   (f) முறையாக பரிசீலிக்கப்பட்ட கட்சியின் ஆண்டு நிதி அறிக்கை மத்திய உயர்நிலைச் செயற்குழுவிடமிருந்து பெற்றுக் கொண்டு அது ஏற்றுக் கொள்ளப்படும்;

   (g) மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் ஆண்டு அறிக்கையை சரிபார்த்து அது ஏற்றுக்கொள்ளப்படும்;

   (h) கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு சமர்பிக்கும் பிரகடனங்கள்/அறிவிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும்;

   (i) கட்சியின் சட்டத்திட்டங்களில் திருத்தங்கள் குறித்த ஆலோசனைகளைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளப்படும்;

   (j) கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு சமர்பித்த தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்;

   (k) இப்பிரிவின் 7-வது துணை பிரிவின் படி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்களை தீர ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கப்படும்;

   (l) ஒரு சிறந்த கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர் நிறுவனத்தை கட்சியின் வெளி கணக்காய்வாளராக அடுத்துவரும் பேரவை வரை நியமிக்கப்படுவர்;

   (m) கட்சியில் உள்ள இருவரை உள் கணக்காய்வாளராக அடுத்துவரும் பேரவை வரை நியமிக்கப்படுவர்.

6. கட்சிப் பேரவைக்கு 10 வாரங்களுக்கு முன், பொதுச் செயலாளர் அனைத்து கிளைகளுக்கும் எழுத்துப்பூர்வமாக அழைப்பிதழ் அனுப்பி பேரவையின் திகதி மற்றும் இந்த சட்டத்திட்டதில் உள்ள, துணை பிரிவு 7 மற்றும் 13-ஐ

அவர்தம் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

7. பேராளர்களை அனுப்ப தகுதியுள்ள கிளைகள் ஏதேனும் தீர்மானங்கள் முன்வைக்க விரும்பினால் அக்கிளை கட்சியின் பொதுச் செயலாளருக்கு முன்கூட்டியே எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மேலும் அத்தீர்மானம் மற்றோரு கிளையால் வழிமொழியப்பட்டு பேரவை நடைப்பெறும் தேதிக்கு ஆறு வாரங்களுக்கு முன்பே அனுப்பி வைத்து விட வேண்டும்.

8. கட்சி சிறப்பு பேரவை குறித்த அறிவிப்பை கட்சி சிறப்பு பேரவை நடைப்பெறும் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்பதாகவே அப்பேரவையில் விவாதிக்கவிருக்கும் விஷயங்களை அனைத்து கிளை மற்றும் பேராளர்களுக்கு அனுப்பி வைத்து விட வேண்டும். குறிப்பிடாத மற்ற விஷயங்களை சிறப்பு பேரவையில் விவாதிக்க முடியாது.

9. கட்சியின் தேசிய பேரவை நடபெறுவதற்கு பத்து நாட்களுக்கு முன் அல்லது கட்சியின் சிறப்பு பேரவை நடைபெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன் கட்சியின் பொதுச் செயலாளர் அனைத்து கிளைகளுக்கும் பேரவை சம்பந்தமான முக்கிய விவரங்களை அனுப்பி வைக்க வேண்டும். அதில், தேசிய பேரவைக்கு மட்டும் இப்பிரிவின் 7-ஆம் துணை பிரிவில் குறிப்பிட்டிருப்பதுப்போல கட்சியின் ஆண்டு கணக்கறிக்கை, விவாதிக்கப்போகும் விஷயங்கள், கிளைகளின் தீர்மானங்கள் மற்றும் இப்பிரிவின் 13-ஆம் துணை பிரிவில் குறிப்பிட்டிருப்பதுப்போல கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்களின் பட்டியலும் அடங்கும்.

10. கட்சியின் தேசிய பேரவை அல்லது சிறப்பு பேரவை நடைபெறுவதற்கு முன் மத்திய உயர்நிலைச் செயற்குழு கட்சியின் உறுப்பினர்களிலிருந்து குறிப்பிட்ட சிலரை அவைத் தலைவர் மற்றும் துணை அவைத் தலைவரை நியமிக்க வேண்டும். அவைத் தலைவர் இல்லாதபோது துணை அவைத் தலைவர் அவைத் தலைவரின் பொறுப்பை ஏற்க வேண்டும்.

11. கட்சியின் தேசிய பேரவைக் கட்சியின் அனைத்து விவரங்களும் தீரும் வரை ஒத்தி வைக்கப்படலாம்.

12. கட்சியின் உறுப்பினர்கள் பேராளர்களாக தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும் பேரவையில் கலந்துக் கொள்ளலாம். ஆனால், வாக்களிக்க முடியாது. அவர்கள் அவைத் தலைவரின் அனுமதி கிடைக்கப் பெற்றால் உரை நிகழ்த்தலாம்.

13. கட்சியின் பேரவைக்கு தகுதி பெறும் ஒவ்வொரு கிளையின் செயற்குழு 20 உறுப்பினர்களின் பெயர் வரை மத்திய உயர்நிலை செயற்குழு பொறுப்புக்கு போட்டியிட முன்மொழியலாம். இந்த முன்மொழியப்பட்ட பெயர் பட்டியல் கட்சி தேசிய பேரவை நடைபெறும் திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்கு முன்பதாகவே கட்சி பொது செயலாளரிடம் கிடைக்கப்பெற வேண்டும்.
14. ஒவ்வொரு பேராளரும் 20 வேட்பாளர்களை கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழு உறுப்பினராவதற்கு தேர்ந்தெடுப்பர்.
15. கட்சியின் பேரவை இந்த சட்டத்திட்டத்தில் உள்ள முதல் பட்டியல் படியே நடக்க வேண்டும்.
16. அரசியலில் பெண்கள் ஈடுப்படுவதை ஊக்குவிக்கும் வகையில் மத்திய செயற்குழுவில் 30%பெண்கள் இடம்பெற செய்ய கட்சி பேரவை இட ஒதுக்கீட்டை ஏற்படுத்தி தர வேண்டும்.

## பிரிவு IX:
## கட்சி மாநாடு

1. கட்சியின் மாநாடு 18 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும். ஆனால், அந்த சமயத்தில் கட்சியின் தேசியப் பேரவை நடைபெற திட்டமிட்டிருந்தால், கட்சியின் மாநாடு நடத்த இயலாது. ஆகவே கட்சியின் தேசிய பேரவை முடிந்து 18 மாதங்களுக்குள் கட்சியின் மாநாடு நடைபெற வேண்டும். கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவிற்கு மாநாட்டை 6 மாதங்களுக்கு மேல் போகாமல் ஒத்திவைக்க முழு அதிகாரம் உண்டு.
2. இந்தச் சட்டத்திட்ட புத்தகத்தில் உள்ள பிரிவு 8-ன் கீழ் துணை பிரிவு 2,3,6,7,10,11,12 மற்றும் 15 முழுமையாக கட்சி மாநாட்டிற்கு பயன்படுத்த வேண்டும்
3. கட்சியின் மாநாடு பின் கூறப்படும் முறையில்தான் நடைபெற வேண்டும்:
    (a) கட்சியின் தேசியத் தலைவரின் வரவேற்புரை;
    (b) பொதுச் செயலாளரின் தலைமை உரை;
    (c) பொதுச் செயலாளர் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தல்;
    (d) கடந்த கட்சியின் தேசிய பேரவை/ சிறப்பு பேரவை

கூட்டக் குறிப்புகளை அங்கீகரித்தல்;

(e) மத்திய உயர்நிலை செயற்குழுவிடமிருந்து கடந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்;

(f) மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்;

(g) மத்திய உயர்நிலைச் செயற்குழு சமர்ப்பித்த அறிவிப்புகளுக்கு ஒப்புதல் தெரிவித்தல்;

(h) கட்சி அமைப்புச் சட்டதில் செய்யப்படவிருக்கும் மாற்றங்களை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்;

(i) மத்திய உயர்நிலைச் செயற்குழு சமர்பித்த தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(j) இப்பிரிவின் 2-வது துணை பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பதுப்போல கட்சியின் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை முடிவெடுத்தல்.

4. கட்சி மாநாடு நடைப்பெறுவதற்கு 10 நாட்களுக்கு முன்பதாகவே பொதுச் செயலாளர் அனைத்து பேராளர்கள் மற்றும் கட்சி மாநாட்டிற்கு பேராளர்களை அனுப்பி வைக்கும் தகுதியுள்ள அனைத்து கிளைகளுக்கும் கட்சி மாநாடு தொடர்பான அனைத்து விவகாரங்களை தெரிவிக்க வேண்டும். இந்த அறிவிப்புடன் பொதுச் செயலாளர் ஒரு வருடாந்திர கணக்கறிக்கை மற்றும் கிளைகளின் தீர்மானப் பட்டியலையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

## பிரிவு X:
## கட்சி நிர்வாகம்

1. (a) கட்சியின் தேசியப் பேரவை 30 பேர் கொண்ட மத்திய உயர்நிலைச் செயற்குழுவை தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த 30 உறுப்பினர்கள் அவர்களுக்குள் கீழ்கண்ட பதவிகளை தேர்வு செய்து நிரப்பிக்கொள்ள வேண்டும்.

- ஒரு தேசியத் தலைவர்,
- ஒரு தேசியத் துணைத் தலைவர்,
- தேசிய உதவித் தலைவர்கள் (அதிகப்பட்சம் 5 பேர்),
- ஒரு பொதுச் செயலாளர்,

- 3 துணை பொதுச் செயலாளர்கள்,
- ஒரு தேசியப் பொருளாளர்,
- ஒரு தேசியத் துணை பொருளாளர்,
- ஒரு தேசிய அமைப்புச் செயலாளர்,
- தேசிய அமைப்பு துணை செயலாளர் (அதிகப்பட்சம் 2 பேர்),
- ஒரு தேசிய விளம்பரச் செயலாளர்,
- தேசிய விளம்பரத் துணை செயலாளர் (அதிகப்பட்சம் 2 பேர்),
- ஒரு அனைத்துலக செயலாளர்,
- ஒரு அனைத்துலக துணை செயலாளர்,
- ஒரு தேசிய அரசியல் கல்வி இயக்குநர்,
- ஒரு தேசிய அரசியல் கல்வி துணை இயக்குநர்,

(b) மத்திய செயற்குழு அதிகப்பட்சம் 10 பேர் வரை மத்திய செயற்குழுவில் சேர்த்துக்கொள்ளலாம்.

(c) மாநில தலைவர் அலலது மகளிர் பிரிவு தேசிய தலைவர் அல்லது இளைஞர் பிரிவு தேசிய தலைவர் மத்திய செயற்குழுவில் தேர்வு அல்லது நியமனம் செய்யப்படாவிட்டால் வாக்களிக்க முடியாத உறுப்பினர்களாக மத்திய செயற்குழுவில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

(d) இவர்கள் அனைவரும் அடுத்த கட்சியின் தேசிய பேரவை வரை பொறுப்பில் இருப்பர்.

(e) மற்ற பிரிவு மற்றும் சிறிய செயற்குழுவில் இடம்பெற மத்திய செயற்குழு கட்சி உறுப்பினர்களை நியமிக்கலாம்.

(f) மத்திய செயற்குழுவில் உள்ள அனைத்து பொறுப்புகளும் மறுபடியும் தேர்வு செய்ய முடியும், பொதுச் செயலாளர் பொறுப்பைத் தவிர.

(g) மத்திய செயற்குழு கூட்டத்தை நடத்துவதற்கு 50% உறுப்பினர்கள் வருகை தேவை. வாக்கு அளிக்க முடியாத உறுப்பினர்கள் இந்த 50 % வருகை கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

2. (a) நிர்வாக அதிகாரம் பொதுச் செயலாளரிடம் உள்ளது.

(b) தொடர்ச்சியாக அல்லது அதற்கு மாறுப்பட்டு ஒரு பொதுச் செயலாளர் 3 தவணைக்கு மேல் அந்த பொறுப்பில் இருக்க முடியாது. தவணை கால இடையில்

அப்பொறுப்பை ஏற்றிருந்தால் அந்த தவணை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

3. தேசிய தலைவர், துணை தேசிய தலைவர், இரண்டு தேசிய உதவித் தலைவர்கள், பொதுச் செயலாளர், இரண்டு உதவி பொதுச் செயலாளர், தேசிய பொருளாளர், தேசிய அமைப்புச் செயலாளர்,தேசிய விளம்பரச் செயலாளர், அனைத்துலக துணை செயலாளர், தேசிய அரசியல் கல்வி இயக்குநர் ஆகிய செயற்குழுவை மத்திய செயற்குழு அமைத்துள்ளது.
4. இந்தச் செயற்குழுவானது மத்திய செயற்குழு வழங்கும் அனைத்து கடமைகளையும் பொறுப்புகளையும் செய்ய வேண்டும்.

## பிரிவு XI: கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் கடமைகள்

1. கட்சி மாநாடு அல்லது பேரவை நடைபெறும் போது, மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட ஒரு கணக்கறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும்.
2. கட்சி மாநாடு, சிறப்பு பேரவை அல்லது தேசியப் பேரவை நடைபெறும் போது கட்சியின் சட்டத்திட்டங்கள் குறித்த மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் மற்றும் தீர்மானங்களை மத்திய உயர்நிலைச் செயற்குழு முன்மொழிய வேண்டும். ஆனால், இந்தப் பரிந்துரையானது அவ்வப்போது உள்ள அரசியல் சூழ்நிலைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
3. தேர்தலின் போது, கட்சியின் செலவுகளை கவனிக்க சிறப்பு நிதியை தொடங்கி அதை வ்ழி நடத்த வேண்டும். அதே சமயத்தில், கட்சியின் நோக்கங்கள் மற்றும் வருங்கால இலட்சியத்தையும் மக்களிடையே பரப்ப வேண்டும்.
4. கட்சியின் சட்டத்திட்டத்தை நிலைநிறுத்தி அதனைச் செயல்படுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
5. இந்நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் மற்றும் தொகுதிகளிலும் கட்சியின் கிளைகளை திறக்க ஆவணச் செய்ய வேண்டும். அதோடு, அனைத்து கிளைகளின் நடவடிக்கைகள் கட்சியின் பேரவை முடிவு செய்த சட்டத்திட்டதின் முறைப்படி மற்றும் கட்சியின் நோக்கங்களுக்கு ஏற்ப இருபதை உறுதி செய்ய வேண்டும்.

6. கட்சியின் கட்டொழுங்கு, விதிமுறைகளை நிலைநாட்டி பின் கூறப்படும் விவகாரங்களுக்கு விதிமுறைகளை வடிவமைக்க வேண்டுக்ம்:
   (அ). உறுப்பினர் நியமனம், கடமைகள், கட்டொழுங்கு, தற்காலிக நீக்கம் அல்லது நிரந்தர நீக்கம்; மற்றும்
   (ஆ). நடவடிக்கை, வரவு செலவு, நிர்வாகம், கட்டொழுங்கு, கிளைகள் கலைத்தல்.
7. கட்சியின் தேசியப் பேரவை, கட்சி மாநாடு, மாநில மாநாடு, மாநில வருடாந்திர மாநாடு, நாடாளுமன்ற தொடர்புக்குழுவின் வருடாந்திர பொதுக் கூட்டம், கிளைகளின் வருடாந்திர பொதுக் கூட்டம் அல்லது அனைத்து நிலைகளில் உள்ள கட்சியின் கூட்டம் மற்றும் பேரணி கட்டுப்பாடுடன் நடத்துவதற்க்கு நிரந்தர விதிகளை தேவைபடும் பொது மாற்றியமைத்தல்.
8. கட்சியின் பணிகளை சிறப்பாக செய்ய பொதுச் செயலாளர் அல்லது பிற உறுப்பினர்களுக்கு நினைவுப்படுத்த வேண்டும். இந்த விவகாரத்தில், கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு தங்களுக்கு உதவி புரிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை நியமிக்கலாம். நேர்மை தவறிய, திறமை இல்லாத, கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் திட்டத்தை நிறைவேற்றத் தவறிய எந்தவொரு அதிகாரி அல்லது பணியாளரை மத்திய செயற்குழு கட்சியின் நலனுக்காக பணி நீக்கம் செய்யலாம். அதே சமயத்தில், கட்சியின் மாநில செயற்குழுவிற்கான தேர்தலையும் ஏற்று நடத்த வேண்டும்.
9. கட்சியின் சட்டத்திட்டதில் உள்ள அனைத்து அல்லது பகுதி விதிகள் அல்லது வார்த்தை அல்லது வார்த்தைகளில் உள்ள விளக்கங்கள், அமைப்பு, மொழிப் பெயர்ப்பு மற்றும் அர்த்தங்களில் சர்ச்சை ஏற்பட்டால், மத்திய உயர்நிலைச் செயற்குழு தீர்மானித்து முடிவுச்செய்யும் விளக்கங்கள், அமைப்பு, மொழிப் பெயர்ப்பு மற்றும் அர்த்தங்கள்தான் இறுதியானது.

# பிரிவு XII:
# மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அதிகாரங்கள்

1. தேசியத் தலைவர்:
   (a) தேசியத் தலைவர் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு ஏற்றுக்கொண்ட அனைத்துவிதிகளையும் கையெழுத்திட வேண்டும்.
   (b) எப்பொழுது வேண்டுமானாலும் தேசியத் தலைவர் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு மற்றும் மத்திய பணிக் குழுவைக் கூட்டலாம்.
   (c) தேசியத் தலைவரின் பணிகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் அவர் இல்லாத போது தேசிய உதவித் தலைவரிடம் அல்லது மத்திய உயர்நிலைச் செயற்குழு தேர்ந்தெடுக்கும் ஒருவரிடம் வழங்கப்படும்.
2. பொதுச் செயலாளர்:
   (a) பொதுச் செயலாளர்தான் கட்சியின் அனைத்து மத்திய உயர்நிலைச் செயற்குழு, மத்திய பணிக் குழு கூட்டங்கள், மாநாடு, தேசிய மற்றும் சிறப்புப் பேரவைக்கு அழைப்பு விடுக்க வேண்டும்.
   (b) அனைத்து கடிதம் அனுப்பும் பணிகளைக் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு மற்றும் மத்திய பணிக் குழுவின் மேற்பார்வையின் அவர் மேற்கொள்வார்.
   (c) அனைத்து மாநில மற்றும் தொகுதி கிளைகளுக்கு கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் முக்கிய நடவடிக்கைகளைத் தெரியப்படுத்த வேண்டும். அதோடு பொதுச் செயலாளர், கட்சியில் நடந்த அனைத்து கூட்டம், மாநாடு மற்றும் பேரவைகளின் கூட்டக் குறிப்புகளை அவசியம் வைத்திருக்க வேண்டும்.
3. துணை பொதுச் செயலாளர்கள், பொதுச் செயலாளரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற முற்றிலும் துணை புரிய வேண்டும். பொதுச் செயலாளர் இல்லாத போது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை ஆற்ற வேண்டும்.

4. தேசியப் பொருளாளர்:
   (a) தேசியப் பொருளாளர் கட்சியின் அனைத்து நிதி நடவடிக்கைகளை முழுமையாக கண்காணிக்க வேண்டும். கட்சிக்கு கொடுக்கப்படும் அனைத்து நிதிக்கும் அத்தாட்சியாக ரசீதை அவர் வழங்க வேண்டும்.
   (b) கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க கட்சிக்கு வங்கியில் வங்கி கணக்கை தேசியப் பொருளாளர் திறக்க வேண்டும். பின்பு, பெறப்படும் அனைத்து நிதிகளையும் வங்கியில் கட்சியின் வங்கி கணக்கில் செலுத்திட வேண்டும்.
   (c) தேசியப் பொருளாளர் கட்சியில் முழுமையான ஆண்டு கணக்கறிக்கையை தயாரிக்க வேண்டும். இந்தக் கணக்கறிக்கையை அவர் கட்சியின் தேசிய மாநாடு மற்றும் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும்.
   (d) தேசிய உதவிப் பொருளாளர், தேசிய பொருளாளரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற முற்றிலும் துணை புரிய வேண்டும். தேசிய பொருளாளர் இல்லாத போது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை ஆற்ற வேண்டும்.
   (e) தேசிய பொருளாளர் ஒரே சமயத்தில் ரிம2000 மட்டுமே கையில் வைத்திருக்க அனுமதி வழங்கப்படும். அதே சமயத்தில் மத்திய உயர்நிலை செயற்குழு அல்லது மத்திய பணி செயற்குழு அனுமதி இல்லாமல் அவர் ரிம1000 மேற்ப்பட்ட செலவைச் செய்ய முடியாது.

5. தேசிய அமைப்புச் செயலாளர்:
   (a) தேசிய அமைப்புச் செயலாளர், பொதுச் செயலாளருக்கு கட்சியை வழிநடத்த முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கட்சியின் அனைத்து மாநிலக் கிளைகள், தொகுதிகள் மற்றும் அனைத்து பிரிவுகள் சிறப்பாக இயங்க தேசிய அமைப்புச் செயலாளரின் பணி மிகவும் முக்கியமானதாகும். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கிளைகளை வழி நடத்திச் செல்லவும் இந்த தேசிய அமைப்புச் செயலாளரின் முழு பங்கேற்பு உள்ளது.
   (b) கட்சியின் கட்டொழுங்கு பிரிவிற்கினங்க சில கட்டொழுங்கு நடவடிக்கைகளையும் தேசிய அமைப்புச் செயலாளர் நிறைவேற்ற வேண்டும். இந்தப் பணியானது, கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழுவின் முழு அனுமதியுடனே மேற்கொள்ளப்படும்.

(c) கட்சியின் பொதுச் செயலாளர் அவ்வப்போது பணிக்கும் அனைத்து அமைப்புப் பணிகளைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும்.

(d) தேசிய அமைப்பு துணைச் செயலாளர்கள் தேசிய அமைப்புச் செயலாளரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற முற்றிலும் துணை புரிய வேண்டும். தேசிய அமைப்புச் செயலாளர் இல்லாத போது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை ஆற்ற வேண்டும்.

6. தேசிய விளம்பரச் செயலாளர்:

கட்சியின் குறிக்கோள்கள் மற்றும் திட்டங்கள் குறித்து அனைத்து தகவல் ஊடகங்களில் விளம்பரப்படுத்த வேண்டும். அதில் புத்தகம், கையேடுகள் மற்றும் கட்சியின் பத்திரிக்கைகள் குறிப்பிடத்தக்கது. தேசிய விளம்பர உதவிச் செயலாளர்கள் தேசிய விளம்பரச் செயலாளர் இல்லாதபோது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை ஆற்ற வேண்டும்.

7. அனைத்துலக செயலாளர்:

அனைத்துலக ரீதியிலான சங்கங்கள் மற்றும் சமூக மன்றங்களுடன் அனுக்கமான் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை வைத்திருப்பது இவரின் முக்கியப் பொறுப்பாகும். அவர் அனைத்துலக மன்றங்கள் மற்றும் சமூக இயக்கங்கள் நடத்தும் முக்கிய நிகழ்வுகளை அவ்வப்போது கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவிடம் தெரிவிக்க வேண்டும். அனைத்துலக உதவி செயலாளர்கள் அனைத்துலக செயலாளரின் கடமைகளை நிறைவேற்ற முற்றிலும் துணைப் புரிய வேண்டும். அனைத்துலக செயலாளர் இல்லாதபோது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை செய்ய வேண்டும்.

8. தேசிய அரசியல் கல்வி இயக்குநர்:

கட்சியில் உள்ள அனைத்து உறுப்பினருக்கும் அரசியல் கல்வி சம்பந்தமான பாடம் மற்றும் சிறப்பு பட்டறைகளை நடத்த வேண்டும். இந்தப் பாடங்கள் மற்றும் பட்டறைகள் கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழுவின் அனுமதியுடன் அவ்வப்போது நடைபெறும். தேசியத் துணைஅரசியல் கல்வி இயக்குநர்கள் தேசிய கல்வி இயக்குநரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற முற்றிலும் துணை புரிய வேண்டும். தேசிய கல்வி இயக்குநர் இல்லாத போது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை ஆற்ற வேண்டும்.

9. மத்திய உயர்நிலைச் செயற்குழு

(a) பிரிவு 10, துணை பிரிவு 1-ன் கீழ் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவில் காலியான இடத்தை நிரப்புவதற்கு அடுத்து வரும் பேரவை வரை உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்கு கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

(b) கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு தங்கள் கடமைகளைச் சிறப்பாக ஆற்ற சில முக்கியப் பிரிவுகள் மற்றும் துணை செயற்குழுக்களை நியமிக்கலாம். இந்தக் குழுக்கள் மற்றும் பிரிவுகள் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வெண்டும்.

(c) கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டத்தை நடத்த வேண்டும். இந்தக் கூட்டம் கட்சியின் விவகாரங்களை வரிசைப்படுத்த துணை புரியும். தேவைப்பட்டால், கட்சியின் கணக்கு புத்தகம் மற்றும் கட்ச பதிவேட்டுகளையும் சரி பார்க்கலாம். குறைந்தது ஐம்பது விழுக்காடு மத்திய உயர்நிலை செயற்குழு உறுப்பினர்கள் இந்த கூட்டத்திற்கு வர வேண்டும்.

(d) கட்சி வேலைக்கு நியமித்த ஒருவரை மத்திய உயர்நிலை செயற்குழு ஏற்றுக் கொள்ள அல்லது பணி நீக்கம் செய்ய அதிகாரம் உள்ளது.

(e) மத்திய உயர்நிலை செயற்குழுவிற்கு இந்நாட்டின் குடிமகனான ஒருவரை ஆலோசகர் அல்லது சில ஆலோசகர்களை நியமிக்க முழு உரிமை உள்ளது. அந்தக் குறிப்பிட்ட ஆலோசகர் அல்லது ஆலோசகர்கள் அனைத்து கட்சி கூட்டங்களில் கலந்துக் கொள்ளலாம். ஆனால், அவர்கள் வாக்களிக்க முடியாது.

(f) கட்சியை பிரதிநிதித்து ஊராட்சி மன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட அனைத்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மத்திய செயற்குழுவிற்கு மட்டுமே உள்ளது. இந்த விஷயத்தில், மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் முடிவே இறுதியானது.

(g) மத்திய உயர்நிலைச் செயற்குழுவிற்கு கட்சியின் விதிமுறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்களை மாற்றியமைக்க முழு உரிமை உள்ளது. இந்த மாற்றியமைப்பு சட்டத்திட்டத்தை மேலும் முறையாக அமல்படுத்த துணை முரியும்.

(h) குறிப்பிட்ட ஒரு மத்திய உயர்நிலை செயற்குழு உறுப்பினர் 3 முறை தொடர்ச்சியாக மத்திய உயர்நிலைச் செயற்குழு கூட்டத்திற்கு வராமல் மேலும் அதற்கு முறையான காரணங்களை அவர் காட்டத் தவறினால், மத்திய உயர்நிலைச் செயற்குழு உடனடியாகவே பணி நீக்கம் செய்யும். அதோடு மட்டுமில்லாமல், மத்திய உயர்நிலைச் செயற்குழு வேறு உறுப்பினரை காலியான அந்த இடத்திற்கு தேர்வு செய்யும்.

(i) மத்திய உயர்நிலைச் செயற்குழு கட்சி சட்டத்திட்டங்களைத் திருத்தம் செய்ய மற்றும் தீர்மானங்களை பரிசீலிக்க சிறப்பு குழுக்களை அமைக்கலாம். இந்த குழுவினர் கட்சி சட்டத்திட்டங்கள் சம்பந்தமான் அனைத்து தொகுதிகள் மற்றும் மாநில கிளைகள் அளிக்கும் தீர்மானங்கள் மற்றும் கோரிக்கைகளை பரிசீலிக்க ஆவணச் செய்யும். பின்பு, இந்த கோரிக்கைகள் கட்சி தேசிய பேரவை, கட்சி மாநாடு அல்லது கட்சி சிறப்புப் பேரவையில் விவாதிக்கப்படும்.

(j) மத்திய செயற்குழுவின், மக்களவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு பிரதிநிதிகளும், நாடாளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட செனட்டர்கள் அல்லது மலேசிய கூட்டமைப்பில் உள்ள மாநில சட்டமன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவருக்கும் அல்லது அனைவருக்கும் குறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பிக்கலாம். இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து உத்தரவுகளும், பொதுச் செயலாளரால் விதிக்கப்படாவிட்டால், எழுத்துப்பூர்வமாக செய்யப்பட வேண்டும்.

10. கட்சியின் அனைத்து காசோலைகளைளிலும் பின் குறிப்பிடப்படும் நபர்களில் யாராவது இருவர் கையெழுத்திடுவர்:

தேசியத் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் தேசியப் பொருளாளர்.

# பிரிவு XIII:
# நிரந்தர உறுப்பிய துணை செயற்குழு

1. மத்திய உயர்நிலைச் செயற்குழு மேலும் ஒரு சிறப்பு செயற்குழுவை நியமிக்கவேண்டும். இந்த குழுவின் பெயர் நிரந்தர உறுப்பிய செயற்குழுவாகும். இந்தக் குழுவில் தேசிய அமைப்புச் செயலாளர் மற்றும் மேலும் 2 கட்சியின் உயர்நிலைச் செயற்குழுவிலிருந்து உறுப்பினர்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். தேசிய அமைப்புச் செயலாளரே இந்த நிரந்தர உறுப்பிய துணைச் செயற்குழுவின் தலைவர் பொறுப்பை வகிப்பார்.
2. ஐம்பது விழுகாட்டுக்கு மேல் (50%) கட்சியின் நிரந்தர உறுப்பிய துணை செயற்குழுவின் கூட்டத்தில் கலந்துக் கொள்ளவேண்டும்.
3. நிரந்தர உறுப்பிய துணை செயற்குழு கிடைக்கபெரும் அனைத்து உறுப்பிய நியமனங்களையும் தீரப்பரிசீலிக்க வேண்டும். பின்பு, அந்த நியமனங்களை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என அது முடிவு செய்ய வேண்டும்.
4. கட்சியின் நிரந்தர உறுப்பிய துணை செயற்குழு அவ்வப்போது கட்சியின் உறுப்பினர்களின் பட்டியலைப் பரிசீலிக்க வேண்டும். தீர ஆராய்ந்த பின், மத்திய உயர்நிலை செயற்குழுவிற்கு ஒரு முழுமையான அறிக்கையை நிரந்தர உறுப்பிய துணை செயற்குழு அனுப்ப வேண்டும். அதில், உறுப்பினரின் அண்மையப் பெயர் பட்டியல், நீக்கம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் மற்றும் தொடர்ந்து கட்சியில் இருக்கும் உறுப்பினர்களின் பெயர் பட்டியலும் சமர்ப்பிக்க வேண்டும். இச்செயலில் அனைத்து உறுப்பினர்களின் செயல், கட்சியின் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலக்குகள் படி இருப்பதை உறுதிச் செய்துக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

# பிரிவு XIV:
# மாநில செயற்குழுக்கள்

1. மாநில செயற்குழு
   (a) ஒவ்வொரு மாநிலத்தின் பொருத்தமான ஒரு செயற்குழுவை மத்திய உயர்நிலை செயற்குழு அங்கீகரிக்க வேண்டும்.
   (b) மாநில செயற்குழுவில் அங்கத்துவம் பெறுபவர்கள் பின்வருமாறு:
      i. சம்பந்தப்பட்ட மாநில குடியுரிமை பெற்றவர்களாகவும் மாநில பொது மாநாட்டின் பதினைந்து உறுப்பினர்கள் மாநில செயற்குழுவில் இருக்க வேண்டும்.
      ii. தேசிய தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் தேசிய அமைப்புச் செயலாளர் ஆகியோர் அனைத்து மாநில செயற்குழுவின் முன்னாள் அதிகாரிகளாக இருத்தல் வேண்டும்.
      iii. மத்திய உயர்நிலை செயற்குழுவின் அனுமதியோடு மாநில செயற்குழுவில் கூடுதலாக மாநில குடியுரிமையுள்ள ஐந்து உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கலாம்.
      iv. ஐந்து உறுப்பினர்களுக்கு மேல் போகாதவர்களை மத்திய உயர்நிலை செயற்குழு தேர்ந்தெடுக்கும்.
      v. வாக்களிக்கும் உரிமையில்லாத முன்னாள் அலுவலர் உறுப்பினர் மாநில மகளிர் தலைவி மற்றும் மாநில இளைஞர் பிரிவு தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டும்.
   c) ஒவ்வொரு மாநில செயற்குழு அதன் உறுப்பினர்களின் தேர்வு:
      • ஒரு மாநில தலைவர்
      • ஒரு மாநில தேசியத் தலைவர்,
      • இரண்டு உதவித் தலைவர்கள்,
      • ஒரு மாநில செயலாளர்,
      • ஒரு மாநில பொதுச் செயலாளர்,
      • ஒரு மாநில பொருளாளர்,
      • ஒரு மாநில துணை பொருளாளர் (தேவைப்பட்டால்),
      • ஒரு மாநில அமைப்புச் செயலாளர்,
      • இரண்டு பேர் வரை தேசிய அமைப்பு துணை செயலாளர்கள் (தேவைப்பட்டால்),

- ஒரு மாநில விளம்பரச் செயலாளர்,
- ஒரு மாநில விளம்பரத் துணை செயலாளர் (தேவைப்பட்டால்),
- ஒரு மாநில அரசியல் கல்வி இயக்குநர்

(d) மாநில செயற்குழு ஒரு மாநில பணிக் குழுவை அமைக்க வேண்டும். அந்த மாநில பணிக் குழுவில், மாநில தலைவர், இரண்டு உதவித் தலைவர்கள்,ஒரு மாநில செயலாளர்,ஒரு மாநில பொதுச் செயலாளர்,ஒரு மாநில பொருளாளர், ஒரு மாநில துணை பொருளாளர் (தேவைப்பட்டால்), ஒரு மாநில அமைப்புச் செயலாளர், இரண்டு பேர் வரை தேசிய அமைப்பு துணை செயலாளர்கள் (தேவைப்பட்டால்) ஒரு மாநில விளம்பரச் செயலாளர், ஒரு மாநில விளம்பரத் துணை செயலாளர் (தேவைப்பட்டால்),ஒரு மாநில அரசியல் கல்வி இயக்குநர் இடம் பெற்றிருக்க வேண்டும். மத்திய பணிக் குழு கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு அளித்த அனைத்து கடமைகள் மற்றும் பொறுப்புகளை முழுமையாக செய்து முடிக்க வேண்டும். கூட்டத்திற்கு ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் மாநில செயற்குழு உறுப்பினர்களின் வருகை தேவை.

(e) 8-வது பிரிவிலுள்ள XXX-யில் இருப்பது போல், மாநில செயற்குழு பதவியில் 3 தவணைக்கு மேல் பதவி வகிக்க முடியாது.

(f) ஒரு மாநிலத் தலைவர் பதவியில் 3 தவணைக்கு மேல் அல்லது தொடர்ந்தார் போல் பதவி வகிக்க முடியாது.

2. மாநில செயற்குழு அதிகாரிகளின் கடமைகள்:

(a) இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது மாநில செயற்குழு கூட்டத்தை ஏற்பாடு செய்து அதன் கூட்டக்குறிப்பை ஏழு நாட்களுக்குள் பொது செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும். ஐம்பது விழுகாட்டுக்கு மேல் (50%) கட்சியின் உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துக் கொள்ளவேண்டும். இக்கூட்டத்தின் திகதி, நேரம், இடம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய அறிவிப்புக் கடிதத்தை அனைத்து மாநில செயற்குழு உறுப்பினர்களுக்கும் மாநில செயற்குழு ஏழு நாட்களுக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும்.

(b) மாநில தலைவர் அவரின் பதவி காலத்தின் போது நடைபெறும் அனைத்து மாநில கூட்டத்திற்கும் தலைமையேற்பதோடு மாநில பணிக்குழு மற்றும் மாநில செயற்குழுவை கூட்டத்திற்கு அழைக்க உரிமை உண்டு.

(c) மாநில தலைவர் கூட்டத்திற்கு வர இயலாத பட்சத்தில் மாநில துணை தலைவர் அல்லது மாநில உதவித் தலைவர் ஒருவர் அவரின் அனைத்து பொறுப்புகளையும் அதிகாரங்களையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(d) கட்சியின் விதிமுறைகளையும் மத்திய உயர்நிலை செயற்குழு மற்றும் மத்திய பணிக்குழுவின் அறிவுரைகளைப் பின்பற்றி மாநில செயற்குழு செயல்படுவதை மாநில பொதுச் செயலாளரின் பொறுப்பாகும். மாநில செயலாளர்தான் கட்சியின் அனைத்து மாநில செயற்குழு, மாநில பணிக் குழு கூட்டங்கள், மாநில மாநாடு, மாநில சிறப்புப் பேரவைக்கு அழைப்பு விடுக்க வேண்டும். அனைத்து கடிதம் அனுப்பும் பணிகளை மாநில செயற்குழு மற்றும் மாநில பணிக் குழுவின் மேற்பார்வையின் அவர் மேற்கொள்வார். மாநில மற்றும் தொகுதி கிளைகளுக்கு கட்சியின் மாநில செயற்குழுவின் முக்கிய நடவடிக்கைகளைத் தெரியப்படுத்த வேண்டும். அதோடு மாநில செயலாளர், கட்சியில் நடந்த அனைத்து கூட்டம், மாநாடு மற்றும் பேரவைகளின் கூட்டக் குறிப்புகளை அவசியம் வைத்திருக்க வேண்டும்.

(e) துணை செயலாளர், பொதுச் செயலாளரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற முற்றிலும் துணை புரிய வேண்டும். மாநில பொதுச் செயலாளர் இல்லாத போது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை ஆற்ற வேண்டும்.

(f) மாநில பொருளாளர் கட்சியின் அனைத்து நிதி நடவடிக்கைகளை முழுமையாக கண்காணிக்க வேண்டும். கட்சிக்கு கொடுக்கப்படும் அனைத்து நிதிக்கும் அத்தாட்சியாக ரசீதை அவர் வழங்க வேண்டும். பொருளாளர் ஒரே சமயத்தில் ரிம500 மட்டுமே கையில் வைத்திருக்க அனுமதி வழங்கப்படும். அதே சமயத்தில் மாநில செயற்குழு அல்லது மாநில பணி செயற்குழு அனுமதி இல்லாமல் அவர் ரிம500 மேற்ப்பட்ட செலவைச் செய்ய முடியாது.இந்தக் கணக்கறிக்கையை அவர் மாநில செயற்குழு மற்றும் மாநில பணிக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். மாநில உதவிப் பொருளாளர், பொருளாளரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற முற்றிலும் துணை புரிய வேண்டும். தேசிய பொருளாளர் இல்லாத போது, அவர்தம் இடத்திலிருந்து அவரின் பணியை ஆற்ற வேண்டும்.

(g) மாநில அமைப்புச் செயலாளர், பொதுச் செயலாளருக்கு கட்சியை வழிநடத்த முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அனைத்து மாநிலக் கிளைகள், தொகுதிகள் மற்றும் அனைத்து பிரிவுகள் சிறப்பாக இயங்க மாநில அமைப்புச் செயலாளரின் பணி மிகவும் முக்கியமானதாகும். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கிளைகளை வழி நடத்திச் செல்லவும் இந்த மாநில அமைப்புச் செயலாளரின் முழு பங்கேற்பு உள்ளது. கட்சியின் கட்டொழுங்கு பிரிவிற்கினங்க சில கட்டொழுங்கு நடவடிக்கைகளையும் மாநில அமைப்புச் செயலாளர் நிறைவேற்ற வேண்டும். இந்தப் பணியானது, கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழுவின் முழு அனுமதியுடனே மேற்கொள்ளப்படும்.

(h) மாநில அமைப்பின் உதவி செயலாளர் மாநில அமைப்பின் செயலாளருக்கு உதவுவார், அவர் இல்லாத நிலையில் அவர் சார்பாக கடமைகளைச் செய்வர்.

(i) மாநில விளம்பர செயலாளர் கட்சியின் நோக்கங்களை பரப்புவார், மேலும் கட்சியின் பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள், மற்றும் கட்சியின் பிற வெளியிடுகளை கட்சியின் கிளைகளுக்கு விநியோகிப்பதற்கும் பொறுப்பேற்க வேண்டும். இந்த வெளியீடுகள் நாட்டிலுள்ள மக்களுக்கு சென்றடைவதை இவர் உறுதி செய்ய வேண்டும்.

(j) மாநில விளம்பர செயலாளர் தனது கடமைகள், அதிகாரங்கள், மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் விளம்பர செயலாளருக்கு உதவுவார், மேலும் மாநில விளம்பர செயலாளர் இல்லாத நிலையில் அவர் சார்பாக கடமைகளை செய்வார்.

(k) மாநில குழுவின் உத்தரவுபடி, அவ்வப்போது, மாநிலத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், அரசியல் கல்வியின் வகுப்புகள் மற்றும் படிப்புகளை நடத்துவதற்கு மாநில அரசியல் கல்வி இயக்குனர் பொறுப் பேற்க வேண்டும்.

(l) மாநில குழுவின் அனைத்து காசோலைகளும் பின்வருபவர்களிடம் கையொப்பமிடப்பட வேண்டும் : மாநில தலைவர், மாநில செயலாளர் மற்றும் மாநில பொருளாளர்.

3. மாநில குழுவின் செயல்ப்பாட்டுகள் :

கட்சி மற்றும் அரசியல் நோக்கங்களை அடைவதிலும் குழுவின் உத்தரவுகளை நிறைவேற்றுவதிலும் பிராந்திய

குழுக்கள் மற்றும் கிளைகளின் செயல்திறனையும் ஒழுக்கத்தையும் உறுதிசெய்யும் நோக்கதோடு ஒவ்வொரு குழுவும் அனைத்து நாடாளுமன்ற பிராந்திய தொடர்புக் குழுக்கள் மற்றும் மாநிலத்தின் கிளைகளின் செயல்பாடுகளை ஒருகிணைக்கும் மிக உயர்ந்த மையம்.

4. ஒவ்வொரு மாநில குழுவும் ஒவ்வொரு உள்நாட்டு கிளையின் நிதி ஏற்பாடு குறித்து பொது மேற்பார்வையை மேற்கொள்ளும், மேலும் உள்நாட்டு கட்சி கிளைகளின் கணக்குகள் அத்தகைய நேரத்தில் சரியான மற்றும் கணகரிக்கை முறையில் வைக்கப்படுவதை உறுதி செய்வதற்கான உத்தரவுகளை பிறப்பிக்கும். அனைத்து கிளைகளும் இந்த வழிமுறைகளுக்கு இணங்க வேண்டும்.

5. ஒவ்வொரு மாநிலக் குழுவும், தேசியத் தலைவர், பொதுச் செயலாளர் அல்லது கட்சி அமைப்பின் தேசிய செயலாளரின் வழிகாட்டுதலின் பேரில், ஒரு கிளையின் உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறவுக் குழுவின் உறுப்பினர்களிடையே உள்ள மோதல்களை விசாரித்து, மோதல்களை தீர்க்க அல்லது பரிந்துரைகளை வழங்க முற்படும். சர்ச்சையைத் தீர்பதற்கு பொருத்தமானதாகக் கருதும் திசைகளை வெளியிடும் மையத்தின் மிக உயர்ந்த அலுவலகத்திற்கு சர்ச்சையைத் தீர்ப்பது.

6. ஒவ்வொரு மாநிலக் குழுவும், மத்திய உயர் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு, அதன் செயல்பாடுகளை நடத்துவதற்கும், தேவையான இடங்களில் வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பணம் சேகரிக்கலாம் மற்றும் அதன் கணக்குகளை முறையாகப் பராமரிப்பதற்கும் தணிக்கை செய்வதற்கும் மத்திய உயர் குழுவுக்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.

7. ஒவ்வொரு மாநிலக் குழுவும் பத்திரிக்கைகள் அல்லது செய்தித்தாள்கள் உட்பட மத்திய உயர் குழுவால் திட்டமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டபடி மாநில அளவில் பிற நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை மேற்கொள்ளும்.

8. அடுத்த வழக்கமான மாநில மாநாடு வரை மாநிலக் குழுவிலிருந்து எழும் எந்தவொரு காலியிடத்தையும் நிரப்ப மாநிலக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

9. அடுத்த வழக்கமான மாநில மாநாடு வரை தணிக்கையாளர்களிடையே எழும் எந்தவொரு காலியிடத்தையும் நிரப்ப மாநிலக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

10. சரியான காரணமின்றி தொடர்ச்சியாக மூன்று மாநிலக் குழுக் கூட்டங்களில் கலந்துக்கொள்ள தவறும் மாநிலக் குழுவின் உறுப்பினர் ஒருவர் மாநில குழுவில் உறுப்பினராக இருப்பதை நிறுத்திவிடுவார். மேலும் மாநிலக் குழு மாநிலக் கட்சியின் எந்தவொரு உறுப்பினரையும் பதவியேற்க நியமிக்கலாம்.

11. குழுவின் தொடர்ச்சியான செயல்பாடு கட்சியின் நலன்களையோ அல்லது பிம்பத்தையோ பாதிக்கும் என்று நினைத்தால், எந்தவொரு மாநிலக் குழுவையும் கலைக்க மத்திய குழுவுக்கு அதிகாரம் உண்டு.

12. மத்திய குழு கலைக்கப்பட்டால், மத்திய உயர் குழு கலைக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குள் ஒரு தற்காலிக மாநிலக் குழுவை அமைத்து, அதன் அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும்.

13. அத்தைகய தற்காலிக மாநில குழு ஆறு மாதங்களுக்கு போகாமல் ஒரு காலத்திற்கு பதவியில் இருக்கும்.

14. மாநில செயற்குழுவின் காலம் முடிவடைந்தவுடன், இந்த கால அவகாசம் நீட்டிக்கப்படாவிட்டால், புதிய மாநில குழு மீண்டும் நிறுவப்படுவதை மத்திய உயர் குழு உறுதி செய்யும்.

# பிரிவு XV:
# மாநில பொது மாநாடு

1. கட்சியின் மாநில நடவடிக்கைகள் அனைத்தும் மாநில வருடாந்திர மாநாடு, மாநில மாநாடு, மற்றும் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அறிவிப்புதல் மற்றும் கண்காணிப்பில் நடைபெறும்.

2. மாநில மாநாடு, மாநில செயற்குழுவின் பதவிக் காலம் முடியும்போது அல்லது முடியும் தருவாயில் நடந்தப்பட வேண்டும். அதனை தவிர்த்து, மாநில மாநாடு அதற்குமுன் நடத்த வேண்டும் என்றால், குறைந்தது 60 விழுகாடு மாநாட்டிற்குப் பேராளர்களை அனுப்ப் தகுதியுள்ள கிளைகளின் எழுத்துப்பூர்வமான விண்ணப்பம் இருக்க வேண்டும். அல்லது குறைந்தது 60 விழுக்காடு மாநாட்டு பேராளர்கள் அல்லது மத்திய செயற்குழு உறுப்பினர்களின் கட்டளைக்கு இணங்க.

3. மாநில மாநாட்டிற்கு குறைந்தது 25 விழுக்காடு பேராளர்களின் வருகை அவசியம்.

4. (a) மாநில மாநாட்டிற்கு அம்மாநிலத்தில் உள்ள தகுதியுள்ள கிளைகளைப் பிரதிநிதித்து அக்கிளையின் தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணை செயலாளர், பொருளாளர், விளம்பரச் செயலாளர் அல்லது மகளிர் தொடர்புடைய விவகாரங்கள் பிரிவின் செயலாளர் கலந்துக் கொள்ளலாம்.

   (b) மாநிலத்தில் உள்ள அனைத்து கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் இந்த மாநில மாநாட்டில் கூடுதல் பேராளர்களாகக் கலந்து கொள்ளலாம்.

5. மாநில மாநாட்டில் கலந்து கொள்ள தகுதியில்லாத உறுப்பினர்கள் அம்மாநாட்டில் பார்வையாளர்களாக கலந்துக் கொள்ளலாம். ஆனால், மத்திய உயர்நிலை செயற்குழுவுடன் மாநில செயற்குழுவும் பேச்சுவார்த்தை நடத்தி அனுமதி தந்தால்தான் அவர்கள் மாநில மாநாட்டில் பார்வையாளராக கலந்துக் கொள்ள முடியும். அவர்கள் வாக்களிக்க முடியாது. அவைத் தலைவரின் அனுமதியுடன் அவர்கள் உரை நிகழ்த்தலாம்.

6. மாநில மாநாட்டின் திகதியைக் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு தீர்மானிக்க வேண்டும்.

7. மாநில மாநாடு பின் குறிப்பிடப்படும் முறையில்தான் நடைபெறும்:

   (a) 15 உறுப்பினர்களை மாநிலச் செயற்குழு நியமிக்க தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

   (b) கடந்த ஆண்டுகளுக்கான மாநில வருடாந்திர மாநாட்டின் கூட்டக் குறிப்புகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

   (c) மாநில செயற்குழுவிடமிருந்து கடந்த ஆண்டுகளுக்கான கணக்கறிக்கைகளைச் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளப்படும்.

   (d) மாநில செயற்குழுவிடமிருந்து ஒரு முழுமையான கட்சியின் மாநில நடவடிக்கை மற்றும் கட்சியின் மேம்பாடுகள் குறித்த ஒரு அறிக்கையைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்.

   (e) மாநாட்டில் இச்சட்டத்தின் உட்பிரிவு 10-ன் படி அனுப்பப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கோரிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்.

(f) மாநிலச் செயற்குழு சமர்ப்பித்த அனைத்து கோரிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளுதல்.

(g) மாநில செயற்குழுவிடம் சமர்பிக்கப்பட்ட இச்சட்டத்தின் உட்பிரிவு 17-ன் படி இதர விஷயங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(h) அடுத்த மாநில மாநாடு வரை, கட்சியின் அம்மாநிலத்திலிருந்து இரண்டு உறுப்பினர்களை மாநில செயற்குழுவின் உள்கணக்காய்வாளாராக நியமிக்கப்படுவர்.

8. மாநில செயற்குழுவின் 15 உறுப்பினர்கள் பரிந்துரை மற்றும் தேர்வு செய்யுதல் விவகாரத்தை மத்திய உயர்நிலை செயற்குழுவின் பொறுப்பு.

9. மாநிலத்தின் மாநாடு நடைபெறும் 8 வாரங்களுக்கு முன்பதாகவே மாநில செயலாளர் அனைத்து கிளை செயலாளர்களுக்கு இந்த மாநாட்டின் திகதியை அறிவிக்க வேண்டும். அதே சமயத்தில், அவர்களை இந்தச் சட்டத்திட்டத்தில் உள்ள துணை பிரிவு 10, 11 மற்றும் 17 பற்றிய தகவல்களை அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

10. மாநில மாநாட்டிற்கு பேராளர்களை அனுப்ப தகுதியுள்ள அம்மாநிலக் கிளைகள் ஏதேனும் பரிந்துரைகள் அல்லது தீர்மானங்களை இந்த மாநாட்டில் வைக்க விரும்பினால், அதை மாநில செயலாளருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். அக்கிளையின் பரிந்துரைகள் அல்லது தீர்மானங்களை மாநில மாநாட்டிற்கு பேராளர்களை அனுப்ப தகுதியுள்ள மற்றொரு கிளை வழிமொழிய வேண்டும். அத்தீர்மானங்களை மாநில செயலாளருக்கு மாநில மாநாடு நடக்கும் திகதிக்கு 4 வாரங்களுக்கு முன்பதாகவே அனுப்பு வைத்து விட வேண்டும்.

11. மாநில மாநாட்டிற்கு பேராளர்களை அனுப்ப தகுதியுள்ள ஒவ்வொரு கிளை செயற்குழுவும் மாநில செயற்குழுவில் இடம்பெறப் போகும் 15 உறுப்பினர்களை பரிந்துரைச் செய்ய முழு உரிமை உண்டு. மாநில கிளை செயற்குழுவின் பரிந்துரைகளை பொதுச் செயலாளரிடம் மாநில மாநாடு நடைபெறும் திகதிக்கு 4 வாரங்களுக்கு முன்பதாகவே அனுப்பிவிட வேண்டும்.

12. மாநில மாநாட்டிற்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன் அல்லது மாநில சிறப்பு மாநாட்டிற்கு குறைந்தது 5 நாட்களுக்கு முன், மாநிலச் செயலாளர் அனைத்து பேராளர்களுக்கு மாநாட்டில் விவாதிக்கப்போகும் விஷயங்களை தெளிவாகத்

தெரியப்படுத்த வேண்டும். அத்துடன் இதில் மாநிலத்தின் கடந்த ஆண்டுகளின் கணக்கறிக்கை, இப்பிரிவின், துணை பிரிவு 10-ன் படி கிளைகளின் தீர்மானங்கள், இப்பிரிவுன், துணை பிரிவு 11-ன் படி மாநில செயற்குவிற்கு தேர்வுப்பெறப்போகும் வேட்பாளர்கள் பட்டியல், மற்றும் இப்பிரிவுன், துணை பிரிவு 17-ன் படி மாநில செயற்குழு ஏற்றுக் கொண்ட பரிந்துரைகளை சேர்த்து அனுப்பிவைக்க வேண்டும்.

13. மாநில மாநாடு அல்லது சிறப்பு மாநில மாநாடு நடைப்பெறும் முன்னே, கட்சியின் மத்திய உயர்நிலை செயற்குழு மாநாட்டை சீராக வழி நடத்த மாநாட்டு அவைத் தலைவர் மற்றும் மாநாட்டு அவைத் துணை தலைவரை நியமிக்க வேண்டும். மாநாட்டின் அவைத் துணை தலைவர் மாநாட்டுத் தலைவர் இல்லாத போது அவரது பணியைச் செய்ய வேண்டும்.

14. ஒவ்வொரு பேராளரும் ஒரு கோரிக்கைக்கு ஒரு வாக்கு அளிக்கலாம்.

15. மாநில மாநாட்டில், எந்தவொரு கோரிக்கை அல்லது தீர்மானம் வாக்கெடுப்பு முறையில் தேர்வு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள வேளையில், கைத்தூக்கல் முறையை பயன்படுத்தி வாக்களிக்கலாம். ஒரு குறிப்பிட்ட தீர்மானம் அல்லது கோரிக்கை சம நிலையில் இருந்தால், உடனடியாக அந்தப் பரிந்துரை நிராகரிக்கப்படும். ரகசிய வாக்கெடுப்பு வேண்டி கோரிக்கை வந்தால், மறுபடியும் கைத் தூக்கும் முறையை பயன்படுத்தி மாநாட்டுத் தலைவர் அவையினரிடையே அந்தக் குறிப்பிட்ட கோரிக்கையை ஏற்றுக் கொள்ளப்படாத அல்லது நிராகரிக்கப்பட்டதென்று தெரிந்து கொள்ளலாம். இந்தத் தடவை கைத்தூக்கும் முறையே இறுதியான முடிவாகும். ரகசிய வாக்கெடுப்பு கோரிக்கையை விண்ணப்பித்த நபரானவர் தனது கோரிக்கையை மறுபடியும் மீட்டுக் கொள்ளலாம்.

16. மாநாட்டின் முக்கிய விசயங்கள் முழுமையாக தீர்க்கப்படும் வரை மாநாடு நடப்பதை அவ்வப்போது ஒத்திவைக்கலாம்.

17. மாநாட்டில் பேராளர்களை அனுப்ப தகுதியுள்ள கிளைகள் தங்களது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்று நினைத்தால் மாநிலச் செயலாளரிடம் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். அந்தக் கோரிக்கைகளை மாநாட்டில் பேராளர்களை அனுப்ப தகுதியுள்ள வேறு ஒரு கிளை வழிமொழிய வேண்டும். மாநில மாநாடு நடக்கும் திகதிக்கு 5 வாரங்களுக்கு முன்பதாகவே மாநில செயலாளரிடம் அனுப்பி வைத்து விட வேண்டும். அனுப்பிவைக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளைப் பரிசீலித்து மாநாட்டிற்குக் கொண்டு வருவது மாநிலச் செயற்குழுவின் பொறுப்பாகும். இந்த விசயத்தில் மாநில செயற்குழுவின் முடிவு இறுதியானது ஆகும்.

18. இந்த மாநாடு சுமூகமாக நடைபெற சில திருத்தங்களுடன் இந்தச் சட்டத்திட்டதில் உள்ள சில முதல் பட்டியல் துணைப்புரியும்.

## பிரிவு XVI:
## மாநில வருடாந்திர மாநாடு

1. மாநில வருடாந்திர மாநாடு ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படவேண்டும். ஆனால், மாநில மாநாடு நடைப்பெறும் ஆண்டில் இந்த வருடாந்திர மாநாடு நடத்தப்படக்கூடாது.
2. இந்த மாநில வருடாந்திர மாநாட்டில் 15 வது சட்டத்திட்டத்தில் உள்ள துணை பிரிவுகள் 3,4,5,9,10,12,13,14,15,16,17 மற்றும் 18 அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்தவேண்டும்.
3. மாநில வருடாந்திரக் மாநாடு பின் கூறப்படும் வழிமுறையில்தான் நடக்கவேண்டும்.
   (a) கடந்த ஆண்டு மாநில மாநாட்டின் அறிக்கையைப் பரிசிலித்து அதை ஏற்றுக்கொள்ளப்படும்.
   (b) மாநில செயற்குழுவிடம் இருந்து முறையாகச் சரிப்பார்க்கப்பட்ட கடந்த ஆண்டுகளின் கணக்கறிக்கைகளைச் சமர்பித்து அதை ஏற்றுக் கொள்ளப்படும்.
   (c) மாநில செயற்குழுவிடமிருந்து கட்சியின் மாநில கிளைகள் மற்றும் தொகுதிகளின் முன்னேற்றம் மற்றும் கட்சியின் மாநில கூட்ட வளர்ச்சி குறித்த ஒரு சிறப்பு அறிக்கையைப் பெற்றுக் கொண்டு அதைப் பரிசிலித்து ஏற்றுக்கொள்ளப்படும். இந்த அறிக்கைக் கடந்த மாநிலக் கூட்டம் நடைப்பெற்றதிலிருந்து அமைந்திருக்க வேண்டும்.
   (d) மாநிலக் கூட்டத்திற்கு பரிசீலிக்கப்பட்ட அனைத்துத் தீர்மானங்களை முறையாகப் பரிசீலித்து அதனை ஏற்றுக் கொள்ளப்படும்.
   (e) மாநிலக் செயற்குழு சமர்பித்த அனத்துத் தீர்மானங்கள் மற்றும் கோரிக்கைகளை முறையாக ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளப்படும்.
   (f) இப்பிரிவின் துணை பிரிவு 2-ன் படி மாநில செயற்குழுவிடம் பரிந்துரைத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளை தீரப்பரிசீலித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. மாநில வருடாந்திர மாநாடு நடைப்பெற குறைந்தது 7 நாட்களுக்கு முன்பதாகவே மாநிலச் செயலாளர் அனைத்து மாநில கிளைகள் மற்றும் பேராளர்களுக்குக் கூட்டத்தைப் பற்றி எழுத்து பூர்வமாகத் தெரியப்படுத்திவிட வேண்டும். அதே சமயத்தில், இப்பிரிவின் துணை பிரிவு 2-ன் படி ஆண்டு கணக்கறிக்கை, மாநிலக் கிளை மற்றும் முக்கியப் பரிந்துரைகளின் பட்டியலையும் சேர்த்து அவர் அனுப்பி வைக்கவேண்டும்.

## பிரிவு XVII:
## நாடாளுமன்ற தொடர்புச் செயற்குழு நியமித்தல் மற்றும் கலைத்தல்

1. மத்திய செயற்குழு மாநில செயற்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப நாடாளுமன்ற தொடர்புக்குழுவை அமைக்க முடியும். பரிந்துரை செய்யப்படும் அந்த நாடாளுமன்ற தொகுதியில் குறைந்தது 2 கிளைகள் இருக்க வேண்டும்.
2. கட்சியின் நற்பெயரை பாதிக்கும் வகையிலுள்ள எந்தவொரு நாடாளுமன்ற தொடர்புச் செயற்குழுவையும் மத்திய உயர்நிலை செயற்குழு அதனை கலைக்கும் அதிகாரம் உண்டு.
3. அப்படி கலைக்கப்படும் நாடாளுமன்ற தொடர்புக்குழுவை தொடர்ந்து மத்திய உயர்நிலை செயற்குழு தற்காலிக நாடாளுமன்ற தொடர்புச் செயற்குழு ஒன்றை ஆறு மாதங்களுக்குள் அமைத்து அந்நாடாளுமன்றத்திலுள்ள கிளை உறுப்பினர்களை பதவியில் நியமிக்க வேண்டும்.

## பிரிவு XVIII:
## நாடாளுமன்ற தொடர்பு செயற்குழுவின் கூட்டம்

1. 2 வருடங்களுக்கு ஒரு முறை நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவின் கூட்டம் நடத்தப்பட வேண்டும். கூட்டத்தின் திகதி மத்திய செயற்குழுவால் முடிவு செய்யப்படும்.

2. (a) அத்தொகுதியில் நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழு கூட்டத்திற்கு பிரதிநிதிகளை அனுப்ப தகுதியுள்ள கிளைகள் அக்கிளையின் தலைவரை அனுப்ப வேண்டும். (அல்லது அக்கிளை முடிவு செய்யும் ஒரு உறுப்பினர், அக்கிளையின் தலைவர் கலந்துக் கொள்ளவில்லை என்றால் அவர் கலந்துக் கொள்ள முடியும்.

(b) அத்தொகுதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மகளிர் மற்றும் இளைஞர் பிரிவுத் தலைவர்கள் கூடுதல் பிரதிநிதிகளாக கலந்துக் கொள்ள முடியும்.

3. நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவின் கூட்ட நிகழ்ச்சி நிரல்:

(a) நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவின் அதிகாரிகள் தேர்ந்தெடுத்தல்.

(b) கடந்த நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவின் ஆண்டு பொது கூட்டத்தின் கூட்டக் குறிப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்.

(c) நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவிடமிருந்து கடந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்

(d) நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவிடமிருந்து நடவடிக்கைகள் மற்றும் செயலவையின் முன்னேற்ற (பதவி காலத்தின் போது) அறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்.

(e) சமர்பிக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கோரிக்கைகளை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்.

(f) சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற தொகுதியில் உள்ள கிளைகளிலிருந்து இரண்டு உறுப்பினர்களை அடுத்து வரும் நாடாளுமன்ற தொடர்பு செயற்குழுவின் கூட்டம் வரை உள்கணக்காய்வாளர்களாக நியமித்தல்.

4. நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவின் கூட்டத்திற்க்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்பதாகவே ஒருங்கிணைப்பாளர் அனைத்து பிரதிநிதிகளுக்கும் கூட்டம் சம்பந்தப்பட்ட முழு விவரங்களை அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதில் கூட்டம் நடைப்பெறும் திகதி, நேரம், இடம், நிகழ்ச்சி நிரல் மற்றும் கணக்கறிக்கையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

5. நாடாளுமன்ற தொகுதி தொடர்பு செயற்குழுவின் கூட்டத்திற்க்கு தேர்வுப்பெற்ற மொத்த பிரதிநிதிகளிலிருந்து 50% கட்டாயமாக கலந்துக் கொள்ளவேண்டும்.

6. பிரதிநிதிகள் பற்றாக்குறை இருந்தால் கூட்டத்தை 30 நிமிடங்களுக்கு தள்ளி வைக்க வேண்டும். 30 நிமிடங்களுக்கு பிறகும் பிரதிநிதிகள் பற்றாக்குறை ஏற்ப்பட்டால், கூட்ட அவைத் தலைவர் கூட்டத்தை வேறு ஒரு திகதிக்கு ஒத்தி வைக்க வேண்டும். வேறு ஒரு திகதியை மாநில செயலவையினர் முடிவு செய்வர். வேறு ஒரு திகதிக்கு ஒத்தி வைக்கும் அந்த கூட்டத்திற்க்கும் தேர்வுப்பெற்ற மொத்த பிரதிநிதிகளிலிருந்து 25% கட்டாயமாக கலந்துக் கொள்ளவேண்டும்.

## பிரிவு XIX:
## நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு

1. நாடாளுமன்றத் தொடர்பு செயற்குழுவின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் பதவிகளை நிரப்ப அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்
   (a) தொகுதிகளில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்;
   (b) நாடாளுமன்ற தொகுதிகளில் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள்;
   (c) நாடாளுமன்றத்தில் இளைஞர் தலைவர்;
   (d) நாடாளுமன்றத்தில் பெண்கள் தலைவர்;
   (e) தகுதியான கிளைகளின் தலைவர்

2. நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு பின்வரும் அலுவலக உரிமையாளர்களின் துணைப்பிரிவு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தனது உறுப்பினர்களின் மத்தியில் தேர்வு செய்யபட வேண்டும்:
   - ஒரு நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு ஒருங்கிணைப்பாளர் (தொகுதிகளில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்)
   - ஒரு நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு செயலாளர்
   - ஒரு நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு பொருளாளர்
   - ஒரு நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு அமைப்பு செயலாளர்
   - ஒரு நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு விளம்பர செயலாளர்

3. பின்வரும் சூழ்நிலைகளில் கடமைகளை பணியாற்ற நாடாளுமன்ற தொடர்பு செயற்குழுவிலிருந்து பொருத்தமான நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு ஒருங்கிணைப்பாளரை நியமிக்க மாநிலக் குழுவுக்கு அதிகாரம் உள்ளது:

   (a) நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைப்பாளராக பணியாற்ற மறுக்கும் போது

   (b) தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது கட்சி மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லையேனில்

   (c) அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், ஆனால் தொகுதியில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை.

4. நாடாளுமன்ற தொடர்புக்குழு அந்நாடாளுமன்றத்தில் உள்ள கிளைகளிலிருந்து எந்த உறுப்பினரையும் இடம் காலி ஏற்பட்டால் அடுத்த வருடாந்திர பொதுக் கூட்டம் வரும் வரை நியமிக்க முழு உரிமை உள்ளது.

5. நாடாளுமன்ற தொடர்புக்குழு அந்நாடாளுமன்றத்தில் உள்ள கிளைகளின் உறுப்பினர்களை நாடாளுமன்ற தொடர்புக்குழு கூட்டத்தில் நியமித்த கணக்காய்வாளர் பதிவி காலியானால் அவர்களை நியமிக்கலாம்.

6. நாடாளுமன்ற தொடர்புக்குழு அதிகாரிகளின் பொறுப்புகள்:

   (a) தலைவர் தமது பதவி காலத்தில் அனைத்து நிலையிலான நாடாளுமன்ற தொடர்புக்குழுவின் கூட்டங்களுக்கு தலைமை வகிக்க வேண்டும். தலைவருக்கு கூட்டத்தை கூட்டுவதற்கான உரிமை உண்டு.

   (b) தலைவரின் அனைத்து பொறுப்புகள், அதிகாரம் மற்றும் பணிகள் அவர் இல்லாதபோது உதவித் தலைவர் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

   (c) அறிக்கைகள் அனுப்பும் அனைத்து பணியையும் செயலாளர் ஏற்றுக் கொள்ள வேண்டும். செயற்குழு கூட்டம் முடிந்து 7 நாட்களுக்குள் பொதுச் செயலாளருக்கு கூட்டக் குறிப்பை அனுப்பி விட வேண்டும்.

   (d) நாடாளுமன்ற தொடர்புக்குழுவின் அனைத்து நிதி தொடர்புடைய விவகாரங்களையும் பொருளாளர் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர் அனைத்து வங்கி கணக்குகளையும் சரியாக வைத்திருக்க வேண்டும்.

   (e) அமைப்புச் செயலாளர் நாடாளுமன்ற தொடர்பு செயற்குழுவின் அமைப்பு சரியாக இயங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நாடாளுமன்ற

தொடர்பு செயற்குழுவின் செயலாளர் அவ்வப்போது கொடுக்கும் அனைத்து அமைப்பு தொடர்புடைய கடமைகளை அமைப்புச் செயலாளர் சரியாக செய்துவிட வேண்டும். விளம்பர செயலாளர் கட்சியின் நோக்கங்களை விளம்பரப்படுத்த வேண்டும்.

7. நாடாளுமன்ற தொடர்புக்ழுவின் செயல்பாடுகளும் அதிகாரங்களும்:

ஒவ்வொரு நாடாளுமன்ற தொடர்புக்குழுவும் மாநில செயற்குழுவுடன் இனைந்து அங்குள்ள கிளைகளுக்கு நடவடிக்கைகளை நடத்த வேண்டும் மற்றும் மாநில செயற்குழு மற்றும் மத்திய உயர்நிலைச் செயற்குழு கொடுக்கும் பொறுப்புகளை ஏற்கவேண்டும்.

8. பிரிவு 30, துணை பிரிவு 8-ன் படி நாடாளுமன்ற தொடர்புக்குழு இரண்டு வருடத்திற்கு மேல் அப்பொறுப்பில் இருக்க முடியாது.

9. நாடாளுமன்ற தொடர்புக்குழு 2 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடத்த வேண்டும். இருபத்தைந்து விழுக்காடுக்கு மேல் உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்தில் கண்டிப்பாக கலந்துக் கொள்ள வேண்டும். அனைத்து தொடர்புக்குழு உறுப்பினர்களுக்கும் கூட்டம் நடைப்பெறும் 7 நாட்களுக்கு முன்பதாகவே அறிவித்து விட வேண்டும்.

10. நாடாளுமன்ற தொடர்புக்குழுவிடமிருந்து வரும் அனைத்து காசோலைகளைளிலும் பின் குறிப்பிடப்படும் நபர்களில் யாராவது இருவர் கையெழுத்திடுவர்: தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர்.

## பிரிவு XX:
## கிளைகளை நியமித்தல் மற்றும் கலைத்தல்

1. மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் விவேக அடிப்படையில் உறுப்பினர்கள் வசிக்கும் மற்றும் தொழில் புரியும் இடங்கள் போன்ற முக்கிய விசயங்களைக் கருத்தில் கொண்டு அந்தக் குறிப்பிட்ட இடத்தில் கிளையை அமைப்பதா இல்லையா என்பதை முடிவு செய்யும்.

2. பின் குறிப்பிட்டடப்படும் காரணங்களால் ஒரு கிளையைக் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு கலைக்க முடியும் :

(a) அந்தக் குறிப்பிட்ட கிளையின் நிர்வாகத்தில் குழப்பங்கள் அல்லது மோசடி நடப்பது நிருபிக்கப்பட்டால், அல்லது

(b) கட்சியின் விதிகள், தேசிய மாநாடு, தேசியப் பேரவை, மத்திய உயர் நிலை செயற்குழு, மாநிலக் மாநாடு, மாநில வருடாந்திர மாநாடு மற்றும் மாநிலச் செயற்குழு எடுத்த முடிவுகளைப் பின் பற்ற மறுத்தால், அந்த குறிப்பிட்ட கிளை கலைக்கப்படும். அதோடு, அந்த குறிப்பிட்ட கிளையின் நடவடிக்கைகள், கட்சியின் நோக்கங்கள் மற்றும் இலட்சியதிற்கு மாறாக இருந்தால், அந்த கிளையை மத்திய உயர்நிலைச் செயற்குழு உடனடியாகக் கலைக்கலாம்.

3. ஒரு கிளையைக் கலைப்பதற்கான முடிவை எடுக்க மத்திய உயர்நிலைச் செயற்குழு ஒரு சிறப்பு கூட்டத்தை நடத்தி அதில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். குறிப்பிட்ட கிளைக் கலைக்கப்படுவதற்கு முன், அந்த கிளைக்கு இரண்டு வார நோட்டிஸ் கடிதம் கொடுக்க மற்றும் அந்தக் கிளை மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு பதில் அளிக்க வாய்ப்பும் வழங்க வேண்டும்.

4. கிளை கலைப்பதற்கான கட்டளை கடித்ததில் தலைமை செயலாளர் கையெழுத்து இட வேண்டும். அந்தக் கலைத்தல் கட்டளை கடிதம் கிடைக்கப்பெற்ற பின், குறிப்பிட்ட கிளை இறுதி பணி தொகுப்பு நடவடிக்கைகளைத் தவிர மற்ற அனைத்து கட்சிப் பணிகளையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

5. இந்த பிரிவில் உள்ள 2-ஆம் துணை பிரிவின் கீழ் கட்சி கிளைக் கலைக்கப்பட்டால், குறிப்பிட்ட கிளையின் அனைத்து உறுப்பினர்கள் கட்சி உறுப்பியத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும். ஆனாலும், கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு குற்ப்பிட்ட கிளையின் தனிநபர் உறுப்பினர்களை இந்த பிரிவிலிருந்து விலக்கப்பட்டு, அவர்களை மறுபடியும் கட்சியின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள ஆவணம் செய்யலாம்.

6. கலைக்கப்பட்டபிறகு, கிளையின் அனைத்து அறிக்கைகள், புத்தகங்கள், ரொக்கம், சொத்துக்கள் மற்றும் ஒரு முழுமையான கணக்கறிக்கையை கிளையின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் பொதுச் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும். இவற்றை கிளையின் இறுதி கணக்கறிக்கையும் சமர்ப்பித்த தேதியிலிருந்து கிளைக் கலைக்கப்பட்டத் தேதி வரை உள்ள கணக்கறிக்கையும் சேர்த்து பொதுச் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

7. கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவிற்கு ஒரு குறிப்பிட்ட கிளையின் செயற்குழுவைக் கலைக்க முழு அதிகாரம் உண்டு. அந்தக் குறிப்பிட்டக் கிளை கட்சியின் நடவடிக்கைக்குப் பாதகம் விளை விற்பதாய் தெரிய வந்தால், இந்த நடவடிக்கை எடுக்கப்படலாம். ஒரு கிளை செயற்குழு கலைக்கப்பட்டு 3 மாதத்திற்குள் புதிய கிளை செயற்குழுவை நியமிக்க மத்திய உயர் நிலை செயற்குழு ஆவனம் செய்ய வேண்டும்.
8. அந்தக் குறுகிய காலத்தில், மத்திய உயர்நிலைச் செயற்குழு ஒரு தற்காலிக கிளை செயற்குழுவை அமைத்து அதன் அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கலாம்.

## பிரிவு XXI:
## கிளையின் ஆண்டு பொதுக் கூட்டம்

1. கட்டணத்தைச் செலுத்திய அனைத்து உறுப்பினர்களும் தங்களின் கிளைகளின் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்துக் கொள்ளுதல், உரையாற்றுதல் மற்றும் வாக்களிக்க முடியும்.
2. கிளைகளின் ஆண்டு பொதுக்கூட்டம் வருடத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும். கிளைகளின் செயாலாளர் கிளையின் வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான தேதிக்கு ஏழு நாட்களுக்குள் கட்டணம் செலுத்திய அனைத்து உறுப்பினர்களுக்கும் கூட்டத்தின் நேரம், இடம், மற்றும் திகதி மற்றும் நிதி கணக்கு அறிக்கைகளை அனுப்பவும்.
3. கிளைகளின் ஆண்டு பொதுக்கூட்டத்தின் உள்ளடக்கங்கள் :

   (a) பதவி பொறுப்பாளர்களை தேர்ந்த்தெடுப்பது :

   - கிளை தலைவர்
   - துணை கிளை தலைவர்
   - செயலாளர்
   - துணை செயலாளர்
   - பொருளாளர்
   - துணை பொருளாளர்
   - கிளை விளம்பர செயலாளர்
   - கிளை பெண்கள் விவகார செயலாளர்
   - 2 கிளை குழு உறுப்பினர்

   (b) அரசியலமைப்பு விதிகளின்படி கட்சி காங்கிரசுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது.

(c) முந்தைய கிளையின் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் குறிப்புகளை அங்கீகரிக்கவும்.

(d) முந்தைய நிதியாண்டை உள்ளடக்கிய தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை கிளைக் குழுவிலிருந்து பெறுங்கள்.

(e) கிளைக்குழுவின் காலப்பகுதியில் அதன் பணிகள் மற்றும் முன்னேற்றங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையை கிளைக்குழுவிலிருந்து பரிசீலித்துப் பெறுங்கள்.

(f) கிளைக்குழுவின் முன் வழங்கப்பட்ட துல்லிய விபரங்களை ஏற்றுக்கொள்வது.

(g) கிளையின் அடுத்த ஆண்டு பொதுக் கூட்டம் வரை 2 கிளை உறுப்பினர்களை கிளை தணிக்கையாளராக நியமித்தல்.

3A. இந்தப் பிரிவின் துணைப்பிரிவு 3 இருந்தபோதிலும், (a) & (b) இன் கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும்.

3B. XXX-யின் பிரிவு 8-யின் கீழ் கிளையின் செயற்குழு இரண்டு வருடத்திற்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது.

4. மகளிர் விவகார செயலாளருக்கான குழுவை கிளையின் பெண் உறுப்பினரால் மட்டுமே நடத்த முடியும்.

5. மாநில குழு அல்லது மத்திய குழுவின் வழிகாட்டுதலில் சிறப்பு கிளை பொதுக் கூட்டங்கள் நடத்தப்படும்.

6. சிறப்பு கிளை பொதுக் கூட்டத்தின் அறிவிப்புகள் கூட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு 5 நாட்களுக்கு முன்னதாகவே கட்டணம் செலுத்திய அனைத்து கிளை உறுப்பினர்களுக்கும் அனுப்பபடும், மேலும் சிறப்பு கிளை பொதுக் கூட்டத்தின் உள்ளடக்கத்தை குறிப்பிடுதல். கூட்டத்தில் வேறு எந்த தலைப்பையும் விவாதிக்க முடியாது. கூட்டத்தில் கலந்துகொள்ளும் கிளைகளின் உறுப்பினர்கள் தங்கள் கட்டணத்தை செலுத்திய கட்சியின் உறுப்பினர்களாக இருப்பார்கள், மேலும் எந்தவொரு தீர்மானத்திலும் பேசவும் வாக்களிக்கவும் உரிமை உண்டு.

7. தங்களின் கட்டணத்தை செலுத்திய கிளையிலிருந்து 11 கட்சி உறுப்பினர்கள் கிளையின் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அங்கத்தினர்களாக இருப்பர்.

8. போதுமான ஒதுக்கீடு இல்லை என்றால், கூட்டம் 30 நிமிடங்களுக்கு தள்ளி வைக்கப்பட வேண்டும். அடுத்த கூட்டதிற்கான கோரம் தங்கள் கட்டணத்தை செலுத்திய எட்டு உறுப்பினர்களுக்கும் குறையாமல் இருத்தல் வேண்டும்.

# பிரிவு XXII:
# கிளை செயற்குழு

1. மத்திய உயர் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு கிளைக் குழுவில் ஆறு கூடுதல் உறுப்பினர்களை நியமிக்க கிளைக் குழுவுக்கு அதிகாரம் இருக்கும்.
2. கிளைக் குழுவின் கடமைகள், மத்திய குழு, கட்சி தேசிய பேரவை மற்றும் கட்சி மாநாட்டின் விதிகள் மற்றும் கட்டளைகளுக்கு ஏற்ப கிளை விவகாரங்களை நிர்வகிப்பது. குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பாதிக்கும் மேலே இருந்தால், கிளைக் குழு மாதத்திற்கு ஒரு முறையாவது நடைபெற வேண்டும்.
3. பொது செயலாளரால் இயக்கப்படாவிட்டால், ஒவ்வொரு சந்திப்பிற்கும் 7 நாட்களுக்குள் 6 நாட்களுக்குப் பிறகு கிளைகளின் செயலாளர் பொதுக் கூட்ட தகவல்களின் நகலை கிளை செயலாளர் பொது செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.
4. கட்சி பொது செயலாளரின் முன் அனுமதியின்றி எந்தவொரு கட்சி கொள்கையிலும் எந்தவொரு பொது அறிக்கையையும் வெளியிட கிளைக் குழு அல்லது அதன் உறுப்பினர்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
5. கிளைக் குழுவில் எழும் எந்தவொரு காலி இடத்தையும் நிரப்ப கிளை உறுப்பினர்களை நியமிக்க கிளை குழுவுக்கு அதிகாரம் உள்ளது.
6. கணக்காளர்கள் மத்தியில் எந்தவொரு காலி இடத்தையும் நிரப்ப கிளை உறுப்பினர்களை நியமிக்க கிளை குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

# பிரிவு XXIII:
# கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் கடமைகள்

1. கட்சி மாநாடு அல்லது பேரவை நடைபெறும் போது, மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட ஒரு கணக்கறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும்.

2. கட்சி மாநாடு, சிறப்பு பேரவை அல்லது தேசியப் பேரவை நடைபெறும் போது கட்சியின் சட்டத்திட்டங்கள் குறித்த மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் மற்றும் தீர்மானங்களை மத்திய உயர்நிலைச் செயற்குழு முன்மொழிய வேண்டும். ஆனால், இந்தப் பரிந்துரையானது அவ்வப்போது உள்ள அரசியல் சூழ்நிலைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

3. தேர்தலின் போது, கட்சியின் செலவுகளை கவனிக்க சிறப்பு நிதியை தொடங்கி அதை வழி நடத்த வேண்டும். அதே சமயத்தில், கட்சியின் நோக்கங்கள் மற்றும் வருங்கால இலட்சியத்தையும் மக்களிடையே பரப்ப வேண்டும்.

4. கட்சியின் சட்டத்திட்டத்தை நிலைநிறுத்தி அதனைச் செயல்படுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

5. இந்நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் மற்றும் தொகுதிகளிலும் கட்சியின் கிளைகளை திறக்க ஆவணச் செய்ய வேண்டும். அதோடு, அனைத்து கிளைகளின் நடவடிக்கைகள் கட்சியின் பேரவை முடிவு செய்த சட்டத்திட்டதின் முறைப்படி மற்றும் கட்சியின் நோக்கங்களுக்கு ஏற்ப இருபதை உறுதி செய்ய வேண்டும்.

6. கட்சியின் கட்டொழுங்கு, விதிமுறைகளை நிலைநாட்டி பின் கூறப்படும் விவகாரங்களுக்கு விதிமுறைகளை வடிவமைக்க வேண்டுக்ம்:

   (a) உறுப்பினர் நியமனம், கடமைகள், கட்டொழுங்கு, தற்காலிக நீக்கம் அல்லது நிரந்தர நீக்கம்; மற்றும்

   (b) நடவடிக்கை, வரவு செலவு, நிர்வாகம், கட்டொழுங்கு, கிளைகள் கலைத்தல்.

7. கட்சியின் தேசியப் பேரவை, கட்சி மாநாடு, மாநில மாநாடு, மாநில வருடாந்திர மாநாடு, நாடாளுமன்ற தொடர்புக்குழுவின் வருடாந்திர பொதுக் கூட்டம், கிளைகளின் வருடாந்திர பொதுக் கூட்டம் அல்லது அனைத்து நிலைகளில் உள்ள கட்சியின் கூட்டம் மற்றும் பேரணி கட்டுப்பாடுடன் நடத்துவதற்க்கு நிரந்தர விதிகளை தேவைபடும் பொது மாற்றியமைத்தல்.

8. கட்சியின் பணிகளை சிறப்பாக செய்ய பொதுச் செயலாளர் அல்லது பிற உறுப்பினர்களுக்கு நினைவுப்படுத்த வேண்டும். இந்த விவகாரத்தில், கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு தங்களுக்கு உதவி புரிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை நியமிக்கலாம். நேர்மை தவறிய, திறமை இல்லாத, கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் திட்டத்தை நிறைவேற்றத் தவறிய எந்தவொரு அதிகாரி அல்லது பணியாளரை மத்திய

செயற்குழு கட்சியின் நலனுக்காக பணி நீக்கம் செய்யலாம். அதே சமயத்தில், கட்சியின் மாநில செயற்குழுவிற்கான தேர்தலையும் ஏற்று நடத்த வேண்டும்.

9. கட்சியின் சட்டத்திட்டதில் உள்ள அனைத்து அல்லது பகுதி விதிகள் அல்லது வார்த்தை அல்லது வார்த்தைகளில் உள்ள விளக்கங்கள், அமைப்பு, மொழிப் பெயர்ப்பு மற்றும் அர்த்தங்களில் சர்ச்சை ஏற்பட்டால், மத்திய உயர்நிலைச் செயற்குழு தீர்மானித்து முடிவுச்செய்யும் விளக்கங்கள், அமைப்பு, மொழிப் பெயர்ப்பு மற்றும் அர்த்தங்கள்தான் இறுதியானது.

# பிரிவு XXIV:
# கிளைகள் சம்பந்தப்பட்ட பொது மானியங்கள்

1. கட்சி கிளை விவகாரங்கள் குறித்த சிறப்பு மானியங்கள் தொடர்பில் விதிகள் இல்லாவிடில் கட்சி தலைமையகத்தின் நிர்வாக அமைப்பு முறைக்கு சம்பந்தப்பட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டும்.
2. கிளைகளின் ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு கட்சியின் தேசிய பேரவை, கட்சியின் சிறப்பு பேரவை, கட்சி மாநாடு, மாநில பொது மாநாடு, மாநில வருடாந்திர மாநாடு, மாநில செயற்குழு, மத்திய உயர்நிலைச் செயற்குழு, மாநில செயற்குழு, நாடாளுமன்ற தொடர்பு செயற்குழு ஆகியவை கிளைகளின் பொதுக் கூட்டம் அல்லது கிளைக் குழுவின் விவகாரங்கள் நிர்வகிப்பது குறித்து வழிநடத்த முடியும்.

# பிரிவு XXV:
# நிதி மற்றும் கணக்கறிக்கைகள்

1. கட்சியின் தலைமையகம், மாநில தலைமையகம், நாடாளுமன்ற தொடர்பு குழு அலுவலகங்கள் மற்றும் கட்சி கிளைகளில் இருக்கும் அனைத்து பணமும் கட்சியின் பொது உடைமையாகும்.

2. கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு அவ்வப்பொழுது கிளைகள் வைத்திருக்க வேண்டிய கட்டண விகிதத்தைத் தீர்மாணிக்க வேண்டும். அத்துடன் மத்திய உயர்நிலைச் செயற்குழு எந்த செலவுகளுக்கு கிளை நிதியை பயன்படுத்தலாம் என்று முடிவு செய்ய வேண்டும்.

3. சில குறிப்பிட்டக் காரணங்களுக்காக, கிளைகள் கட்சியின் நிதியில் இருந்து கனிசமான உதவியைப் பெறலாம். இது உயர்நிலைச் செயற்குழுவின் அனுமதியோடு பெறப்பட வேண்டும். கிளை பொருளாளர் கிளை உறுப்பினர்களின் கட்டணத்தை ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டைக் கிளை நிதிக்காக எடுத்துக் கொண்டு மீதத்தை கட்சியின் தேசிய பொருளாளரிடம் ஒவ்வொரு நிதி ஆண்டின் முதல் மாதத்தில் அனுப்பிவிட வேண்டும்.

4. மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அனுமதியோடு கிளைகளை தங்கள் உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களிடம் இருந்து நிதி மற்றும் நன்கொடையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டைக் கிளையின் நிதிக்கு எடுத்துக் கொண்டு மீதத்தைத் தேசிய பொருளாளரிடம் அனுப்பி வைக்க வேண்டும்.

5. ஒவ்வொரு மாதத்தின் பதினைந்தாவது நாட்களுக்குள் கிளையின் கடந்த மாததிற்கான வருமான அறிக்கை மற்றும் செலவுகள் குறித்த கணக்கறிக்கைகளைக் கிளை பொருளாளர் தேசிய பொருளாளரிடம் அனுப்பி வைக்க வேண்டும்.

6. கிளையின் அனைத்து நிதிகளையும் கிளையின் பேரில் கட்சியின் மத்திய உயர்நிலை குழு முடிவு செய்த ஒரு வங்கியில் வைத்திருக்கப்பட வேண்டும். இந்த வங்கி கணக்கைக் கிளையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருப்பாளர் அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். ஒரு சமயத்தில் கிளையின் பொருளாளர் நானூறு ரிங்கிட்டுக்கு மேல் போகாத (ரி.ம.400) தொகையைத் தனது கைவசம் வைத்திருக்கலாம்.

7. நானூறு ரிங்கிட்டுக்கு மேல் போகும் செலவுகளைக் கிளை செயற்குழுவின் அனுமதி இல்லாமால் கிளை பொருளாளர் மேற்கொள்ள இயலாது.

8. பிரிவு 20, துணை பிரிவு 6 மற்றும் 7-ன் படி கலைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கிளைகள் தாம் வைத்திருந்த அனைத்து கட்சியின் புத்தகங்கள், ரொக்கம் மற்றும் வேறு கட்சியின் சொத்துகள் அனைத்தையும் கிளையின் செயலாளர் பொதுச் செயலாளரிடம் உடனடியாக அனுப்பிவிட வேண்டும்.

# பிரிவு XXVI:
# கட்சி அரசியல் சட்டத்திட்டங்களில் திருத்தங்கள்

1. கட்சியின் சட்டத்திட்டங்களுக்கான திருத்தங்களை பேரவையில் அல்லது கட்சியில் தேசிய சிறப்புப் பேரவையில் மேற்கொள்ளலாம். அதனைத் தவிர்த்து கட்சியின் மாநாட்டில் கூட இது குறித்து முடிவு செய்யலாம்.
2. கட்சியின் அனைத்து கிளைகளிடமிருந்து சட்டத்திட்டத் திருத்தங்கள் அடங்கிய கோரிக்கைகளைக் கட்சியின் பொதுச் செயலாளருக்குக் கட்சி சிறப்பு பேரவை அல்லது மாநாடு நடைப்பெறுவதற்குக் குறைந்தது 28 நாட்களுக்கு முன் எழுத்து பூர்வமாகக் கிளைச் செயலாளரிடம் அனுப்பிவிட வேண்டும். அனைத்து கோரிக்கைகளையும் முழுமையாக பரிசீலனைச் செய்த பிறகு, அது சரியான முறையில் இருந்தால் அவற்றை கட்சியின் தேசியப் பேரவை அல்லது சிறப்புப் பேரவையில் அல்லது கட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.
3. பெறப்பட்ட அனைத்து மாற்றங்களும் கட்சி பேரவை அல்லது கட்சி சிறப்பு பேரவை அல்லது கட்சி மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கும் அனைத்து பேராளர்களுக்கும் குறைந்தது 7 நாட்களுக்கு முன்பதாகவே அனுப்பிவிட வேண்டும்.
4. சட்டத்திட்டத்தில் உள்ள பிரிவுகளை மாற்றம் செய்தல், முற்றாக அழித்தல் அல்லது திருத்தங்கள் குறித்தான பரிந்துரைகளை மாநாட்டில் அல்லது பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டால், அதனை பேரவை அல்லது மாநாட்டில் உள்ள பிரதிநிதிகளின் பாதிக்கு மேல் அந்த பரிந்துரை வாக்களித்து ஏற்றுக்கொண்டால்தான் குறிப்பிட்ட அந்த பரிந்துரைகள் செல்லும்.

# பிரிவு XXVII:
# கணக்காய்வு

1. கட்சியின் தேசிய பேரவை கட்சி உறுப்பினர் அல்லாத ஒரு கணக்காய்வாளர் அல்லது ஒரு கணக்காய்வு நிறுவனத்தை நியமிக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட கணக்காய்வாளர்

அல்லது ஒரு கணக்காய்வு நிறுவனம் தங்கள் பதவிக் காலம் முடியும் வரை அல்லது கட்சிப் பேரவை அந்த பதவியை நீக்கும் வரை அந்த பதவியை அவர்கள் வகிக்கலாம்.

2. அப்படி ஒரு சமயம், பதவி விலகுதல் ஏற்பட்டல், கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு வேறுக் கட்சி உறுப்பினர் அல்லாத கணக்காய்வாளரை அல்லது கணக்காய்வு நிறுவனத்தைத் தற்காலிகமாக நியமிக்கலாம். இந்த நியமனம் அடுத்த கட்சி தேசியப் பேரவை வரைச் செல்லும்.

3. நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் கட்சியின் அந்த ஆண்டில் உள்ள அனைத்துக் கணக்குகளைச் சரிப்பார்த்து முறையான ஒரு கணக்கறிக்கை மற்றும் சான்றிதழை தேசியப் பேரவைக்கு அவர் தயாரிக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட இந்த முழுமையான கணக்கறிக்கை மற்றும் சான்றிதழை தேசியத் தலைவர் கேட்கும் போது அவர் சமர்ப்பிக்க வேண்டும். அதே சமயத்தில், தேசியத் தலைவர் அவரை கட்சியின் அல்லது அதன் கிளைகளின் கணக்குகளையும் சரிப்பார்க்க ஆணை இடும்போது, அந்த கணக்காய்வாளர் அதனை செய்து, அறிக்கைளை மத்திய உயர்நிலைச் செயற்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4. தேசியப் பேரவை குறைந்தது 2 உட்கணக்காய்வாளர்களைக் கட்சியின் தலைமையகத்தின் கணக்குகளைச் சரிப்பார்க்க நியமிக்க வேண்டும். மத்திய உயர்நிலைச் செயற்குழு குறைந்தது 2 உட்கணக்காய்வாளர்களை துணை செயற்குழுவின் கணக்குகளைச் சரிபார்க்க நியமிக்க வேண்டும். அனைத்து நாடளுமன்ற, மாநிலத் தொடர்பு குழு, கிளைகளின் கணக்குகளை உட்கணக்காய்வாளரிடம் சரிப்பார்க்க சமர்ப்பிக்க வேண்டும்.

# பிரிவு XXVIII: பொறுப்பாளர்கள்

1. மூன்று 21 வயதிற்கு மேற்பட்ட பொருப்பாளர்கள் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு நியமிக்கவேண்டும். கட்சி முடிவு செய்த குறிப்பிட்ட தவணைக்காலம் வரை இந்தப் பதவியை அவர்கள் வகிக்கலாம். அவர்கள் கட்சியின் நிரந்தர சொத்துக்களை மத்திய உயர்நிலைச் செயற்குழு கட்டளையிடும் படி நிர்வாகம் செய்ய வேண்டும்.

2. கட்சியின் பொருப்பாளர்கள் இந்தச் சொத்துகளை மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அனுமதி மற்றும் அதிகாரம்

இல்லாமல் விற்கவோ, வெளியேற்றவோ அல்லது மாற்றி வைக்கவோ கூடாது.

3. ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தால், புத்தி சுவாதினம் இல்லாதிருந்தால், அல்லது அவர் கொடுக்கப்பட்ட பணியைத் திறமையாக ஆற்ற முடியாதக் காரணத்தால், மத்திய உயர்நிலைச் செயற்குழு பொருப்பாளர் பதவியில் இருந்து அவரை நீக்கலாம். மரணம், தற்காலிக பதவி நீக்கம், மற்றும் நிரந்தர பணி நீக்கம் ஏற்பட்டால் அந்த காலியான பதவியை மத்திய உயர்நிலைச் செயற்குழு நியமனம் செய்யலாம்.

## பிரிவு XXIX:
## கட்சி கலைத்தல்

1. இந்த கட்சியை கலைப்பதற்கு குறைந்தது மூன்றில் நான்கு பங்கு அதன் உறுப்பினர்களின் சம்மதத்தோடு எளிதாகக் கலைக்கப்படலாம். மேல்கூறப்பட்டபடி கலைக்கப்பட்டால் கட்சிக்காகச் செய்யப்பட்ட அனைத்து கடன்கள் மற்றும் செலவுகளும் நிறைவேற்றப்படவேண்டும். அதோடு மீதமுள்ள கட்சியின் நிதி கட்சி பேரவையின் ஆலோசனைப்படி முறையாக செலவு செய்யப் பட வேண்டும்.

## பிரிவு XXX:
## பொது

1. கட்சியின் நிதி ஆண்டு 1 ஜனவரி தொடங்கி 31 டிசம்பரில் முடிவுறும். பதவி காலம் முடிந்து 6 மாதத்திற்குள், மத்திய உயர்நிலைச் செயற்குழு கட்சியின் பேரவையை நடத்தி அந்த பதவிகாலம் வரை உள்ள கணக்காய்வு செய்யப்பட்ட ஒரு கட்சியின் கணக்கறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.
2. மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் அனுமதியுடன் ஒரு தொழில்முறை சேவைகள் வழங்கியவரைத் தவிர வேறு எந்த உறுப்பினரும் கட்சியின் நிதி அல்லது பரிவர்த்தனைகளிருந்து எந்தவொரு இலாபம், சம்பளம் அல்லது வருமானத்தை எடுக்கக் கூடாது.
3. தேசிய பேரவை அல்லது சிறப்பு தேசிய பேரவை அல்லது கட்சி மாநாடு அல்லது மத்திய உயர்நிலைச் செயற்குழு

அல்லது மத்திய பணிக் குழுவில் எடுக்கும் முடிவுகளை திருத்தம் அல்லது ரத்து செய்யும் வரை அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

4. தேசியத் தலைவர் அல்லது பொதுச் செயலாளர் மட்டும்தான் கட்சியின் பெயரை பயன்படுத்தி பத்திரிக்கை செய்தி கொடுக்க முடியும். தேசியத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் கூட்டாக மற்றவர்களுக்கு அதிகாரம் கொடுத்தால் பத்திரிக்கை செய்தி கொடுக்கலாம்.

5. உறுப்பினர்கள் அல்லது மற்றவர்களுக்கு அவர்களின் இறுதி முகவரியை வைத்து நோட்டிஸ் அல்லது எதாவது தொடர்பு ஆவணங்களை அனுப்பி வைத்துவிட்டால் அது சேர்ந்துவிட்டது என்று எடுத்துக் கொள்ளப்படும்.

6. கட்சிக்காக நேரடியாக அல்லது மறைமுகமாக எதாவது நடவடிக்கையில் ஈடுப்பட்டிருக்கும் போது இழப்பு அல்லது காயம் ஏற்பட்டால் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு விவேக அடிப்படையில் கட்சியின் நிதி அல்லது உறுப்பினர்கள் கொடுத்த நன்கொடையிலிருந்து நஷ்ட ஈடு கொடுக்கும் அதிகாரம் கொண்டுள்ளது.

7. மத்திய உயர்நிலைச் செயற்குழுவிற்கு கட்சியின் இளைஞர் மற்றும் மகளிர் பிரிவை தோற்றுவிக்க அதிகாரம் உள்ளது. அந்த பிரிவுகளின் நிர்வாக முறையை மற்றும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவதற்கு சிறந்த வழிமுறை மற்றும் விதிகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

8. 6 மாதத்திற்கும் மேல் போகாமல் மாநில செயற்குழு, நாடாளுமன்ற தொடர்புச் செயற்குழு மற்றும் கிளைகளின் செயற்குழுவின் காலவரையை நீட்டிப்பதற்கு மத்திய உயர்நிலைச் செயற்குழுவிற்கு முழு அதிகாரம் உள்ளது.

9. வேட்பாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்த வேட்பாளர்கள் மற்றும் பேராளர்களை அனுப்ப தகுதியுள்ள 2 கிளைகளிடமிருந்து பரிந்துரையை பெற்றவர்கள் மட்டும்தான் மாநில மாநாட்டில் மாநில செயற்குழுவுக்கும் அல்லது கட்சியின் தேசிய பேரவையில் மத்திய உயர்நிலைச் செயற்குழுவுக்கும் தேர்வு செய்ய முடியும்.

10. கட்சியில் சேர்ந்து 2 வருடத்திற்கும் குறைவாக இருப்பவர்கள் (மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் ஒப்புதல் தவிர) கீழ்கண்டவைக்கு தகுதியற்றவர்கள்:

   (a) மத்திய உயர்நிலைச் செயற்குழு அல்லது மாநிலச் செயற்குழுவில் தேர்வு செய்ய உள்ள வேட்பாளர்கள்;

   (b) ஊராட்சி மன்றத்தில் உறுப்பினர் பதவிக்காக நியமனம் செய்யப்போகும் வேட்பாளர்கள்;

(c) ஒரு மாநிலத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் அல்லது எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கட்சி சார்ப்பில் தேர்வு பெறப்போகும் வேட்பாளர்கள்.

11. இந்த அரசியலமைப்பில் உள்ள ஆண்களை குறிக்கும் அனைத்து வார்த்தைகளும் பெண்களையும் குறிப்பதாக ஏற்றுக்கொள்ள வேண்டும், வேறு எதாவது குறிப்பிட்டால் அதைத் தவிர.

# முதல் பட்டியல்: கட்சியின் பேரவை மற்றும் மாநாட்டின் நிரந்தர விதிமுறைகள் கூட்டம் நடைபெறும் நேரம்

1. பேரவை/மாநாடு நடைபெறும் நாள் அன்று அனைத்து பிரதிநிதிகளும் மற்றும் பார்வையாளர்களும் சரியாக காலை மணி ஒன்பதுக்கு அல்லது அறிவிக்கப்பட்ட நேரத்துக்குள் ஒன்று கூட வேண்டும்,
2. பின்பு பிற்பகல் ஒரு மணி அளவில் பேரவை / மாநாட்டை மதிய உணவு எடுப்பதற்காக சிறிது நேரம் ஒத்தி வைக்கப்படும். பின்பு பிற்பகல் இரண்டு மணி அளவில் அல்லது அறிவிக்கப்பட்ட நேரங்களில் பேரவை / மாநாடு மீண்டும் தொடரும்.
3. அவைத் தலைவர் பேரவை / மாநாடு முடியும் நேரத்தை முடிவு செய்ய வேண்டும்.

## உரைகளின் கட்டுப்பாடுகள்

4. சிறப்புப் பேரவையில் ஒவ்வொரு பேராளர்களும் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற் குழுவின் அறிக்கைகள், அதன் கணக்கறிக்கைகள், அதன் பரிந்த்துரைகளும், கட்சியின் சட்டத்திட்டங்கள் குறித்த திருத்தங்கள் மற்றும் எதாவது கட்சியின் தீர்மானங்கள் பற்றி உரை நிகழ்த்த சுமார் பத்து நிமிடம் வழங்கப்படும்.
5. பேரவை / மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி ஒரு முறைக்குமேல் உரை நிகழ்த்த பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்படாது.
6. கட்சியின் பொதுச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் மத்திய உயர்நிலைச் செயற் குழுவிடம் முன்மொழியப்பட்ட

தீர்மானங்கள் / கோரிக்கைகள் மட்டுமே பேரவை / மாநாட்டில் விவாதிக்கப்படும்.

7. பிரதிநிதிகள் அவசர தீர்மானங்கள்/ கோரிக்கைகளை பேரவை / மாநாட்டின் அனைத்து விவரங்கள் தீர்க்கப்பட்டவுடன் கொண்டு வரலாம். ஆனாலும் இந்தத் தீர்மானங்கள் / கோரிக்கைகள் முன்கூட்டியே கட்சி அவைத் தலைவரிடம் எழுத்து பூர்வமாக முன்மொழிந்து அதற்கு அவர் ஒப்புதல் அளித்த பின்பு தான் இந்தத் தீர்மானங்கள் அந்த குறிப்பிட்ட விவாததிற்கு கொண்டு வர வேண்டும். அந்த குறிப்பிட்ட தீர்மானத்திற்க்கு அவைத் தலைவரின் முடிவு இறுதியான முடிவாகும்.

8. அவசர தீர்மானங்கள் / கோரிக்கைகள் உட்பட அனைத்தையும் கொண்டுவரும் பிரதிநிதிகளுக்கு உரையாற்ற ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும். பின்பு உரையாற்றும் அவர்களின் ஆதராவாளர்களுக்கு மூன்று நிமிடங்கள் வழங்கப்படும்.

9. எந்த ஒரு பிரதிநிதிக்கும் ஒரு குறிப்பிட்ட தீர்மானம் / கோரிக்கை / அவசர தீர்மானம் / கோரிக்கையைப் பற்றி ஒரு முறைக்கு மேல் உரையாற்ற அனுமதி வழங்கப்படாது. குறிபிட்ட தீர்மானம் / கோரிக்கையை கொண்டுவந்த அந்தப் பேராளர் மட்டும் பதிலளிக்க ஐந்து நிமிடம் வழங்கப்படும்.

10. அவைத் தலைவர் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை முறையாக கட்சியின் முக்கிய அதிகாரிகள் விளக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தால், அவர்களுக்கு எந்த உரையாற்றும் கட்டபாடுகள் விதிக்கப்படக்கூடாது.

11. இந்தச் சட்டத் திட்டங்களில் உள்ள நிரந்தர விதிமுறைகள் 4, 8 மற்றும் 8 தவிர்த்து அவைத் தலைவருக்கு நேரத்தை மாற்றுவதற்கு முழு உரிமை வழங்கப்படாது.

12. பார்வையாளர்கள் வேறு எந்த ஒரு பேராளர்களும் உரையாற்றவில்லை என்றால் மட்டுமே அவர்கள் உரையாற்றலாம், அதுவும் அவைத் தலைவரின் அனுமதியோடு பேச முடியும்.

## தீர்மானங்கள் / கோரிக்கைகளுக்கான திருத்தங்கள்

13. ஒரு குறிப்பிட்ட தீர்மானம் கோரிக்கை குறித்த திருத்தங்கள் அந்த குறிப்பிட்ட பரிந்துரைகள் ஆதரிக்கப்பட்ட பிறகு தான் சமர்ப்பிக்க முடியும். ஒரு பேராளர் மட்டுமே அந்த குறிப்பிட்ட தீர்மானம் கோரிக்கை குறித்தத் திருத்தங்கள் பற்றி தனது கருத்துகளை சமர்ப்பிக்கலாம். அவர் ஐந்து நிமிடங்கள் மேல் போகாமல் தமது உரையை நிகழ்த்த வேண்டும்.

14. குறிப்பிட்ட அந்த பரிந்துரைக்குரிய திருத்தங்கள் முன்மொழியப்பட்டவுடன் திருத்தங்களை முன்மொழிந்த பேராளர் அதனை எழுத்துப்பூர்வமாக பேரவை / மாநாட்டின் அவைத் தலைவரிடம் வழங்க வேண்டும். பிறகு, அவைத் தலைவர் அந்த திருத்தங்களை பேராளர்களின் இடையே முடக்கிவிட்டு அதனை ஆதரிக்க பேராளர்கள் உள்ளனரா என்று கண்காணிக்க வேண்டும். திருத்தங்கள் ஆதரிக்கப்பட்டால், அந்த திருத்தங்களுக்கான விவாதம் திறக்கப்பட வேண்டும். ஆதவாளர்கள் உட்பட உரையாற்றும் அனைவரும் குறைந்தது மூன்று நிமிடங்களுக்கு மேல் போகாமல் தங்கள் உரையை நிகழ்த்த வேண்டும்.

15. ஒரு பேராளர் ஒரு தீர்மானம் / கோரிக்கையில் ஒரு திருத்தத்திற்கு மேல் செய்ய அனுமதிக்கப்படாது.

16. ஒரு திருத்தங்களுக்கு மேல் இருந்தால் முதல் திருத்தும் முறையாக பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட பிறகு தான் அடுத்த திருத்தங்களைப் பரிசீலிக்க முடிவு எடுக்கப்படும்.

17. பேரவை / மாநாட்டில் ஒரு குறிப்பிட்ட தீர்மானம் / கோரிக்கைகான திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பு அந்த திருத்தங்களுக்கான விவாதம் முடிவு வேறு மாதிரி இருந்தால், அந்த குறிப்பிட்ட திருத்தத்திற்கு எந்தவொரு மாற்றமும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் முதல் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படாது.

18. ஒரு திருத்தங்களுக்கு மேல் தேர்ந்தெடுக்கப்பட்டால், குறிப்பிட்ட அந்த கோரிக்கைக்கான விவாதம் தொடரும். பின்பு வாக்கெடுப்பு நடைபெறும். இந்த வாக்கெடுப்பில் அனைத்து திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டால் தீர்மானம் / கோரிக்கை பற்றி விவாதம் தொடரப்பட்டு மறுபடியும் வாக்கெடுப்பு நடைபெறும்.

19. குறிப்பிட்ட தீர்மானம் / கோரிக்கை / திருத்தங்கள் பேரவை / மாநாட்டில் விவாதிக்கப்படுவதற்கு முன்பு அவற்றை சமர்ப்பித்த பேராளர் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மீட்டுக்கொள்ளலாம்.

20. ஒரு குறிப்பிட்ட கோரிக்கை / பரிந்துரைக்கு திருத்தம் அல்லது வேறு ஒரு திருத்ததிற்கு மாற்று திருத்தத்தை விவாதிக்க சமர்ப்பிக்கப்பட்டால் அந்த குறிப்பிட்ட அசல் பரிந்துரை / கோரிக்கை திருத்தம் விவாதத்தில் முடிவு செய்யும் வரை அதனை மீட்டுக்கொள்ளப்பட முடியாது.

## பேச்சாளர்களின் விதிமுறைகள்

21. உரை நிகழ்த்த விரும்பும் பேராளர் தனது கைகளை தூக்கி அவைத் தலைவரிடம் அனுமதியைப் பெற வேண்டும்.

அவைத் தலைவர் அவரை அழைத்தால், அவர் முன் சென்று உரை நிகழ்த்தலாம். ஒரே சமயத்தில் இருவர் அல்லது கூடுதலான பிரதிநிதிகள் கைகளை தூக்கினால் தம்முடைய கவனத்தயீர்த்த முதல் பிரதிநிதியை அவைத் தலைவர் உரை நிகழ்த்த அழைக்கலாம்.

22. ஏற்கனவே உரை நிகழ்த்திய ஒரு பேராளர், அவைத் தலைவர் ஒரு புதிய விஷயத்தை விவாதத்திற்குக் கொண்டு வந்தால் அந்த பிரதிநிதி மீண்டும் ஒரு முறை உரை நிகழ்த்தலாம்.

23. ஒரு குறிப்பிட்ட விஷயத்தை பற்றி உரை நிகழ்த்திய ஒரு பேராளர் மீண்டும் அந்த விஷயத்தை தெளிவுப்படுத்த அல்லது தம்முடைய உரையை தவறாக புரிந்து கொண்டோருக்கு அதனை மறுபடியும் உரை விளக்குவதற்காக மட்டுமே மறுபடியும் உரை நிகழ்த்த வாய்ப்பு வழங்கப்படும். வேரு ஒரு புதிய விஷயத்தை அவர் தொட்டு பேசுவதற்கு அவருக்கு அனுமதி இல்லை.

24. அனைத்து பிரதிநிதிகளும் தங்களின் உரையில் விவாதிக்கப்படும் விஷயங்களை மட்டுமே தொட்டு பேச வேண்டும். விவாதத்திற்கு சம்பந்தம் இல்லாத புதிய விஷயங்கள் அவரகள் பேசக்கூடாது.

25. கட்சியின் பேரவை / மாநாடு தீர்மானித்த விஷயங்களை மறுபடியும் விவதிப்பது அல்லது விவாதத்திற்கு கொண்டு வருவது கட்சியின் விதிமுறையை மீறிய ஒரு செயலாகும்.

26. கட்சியின் உறுப்பினர்கள் அல்லது கட்சி சட்டத்திட்டங்களின் கீழ் முறைபடியாக தோற்றுவிக்கப்பட்ட எந்த ஒரு அமைப்பையும் சாடுவதாக மற்றும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டுவதும் கட்சி விதிமுறையை மீறிய செயலாகும்.

27. ஒரு பார்வையாளர் / பேராளர் வேறு ஒரு பேராளர் / பார்வையாளர் அல்லது கட்சியின் எந்த ஒரு உறுப்பினரையும் குறை சொல்லக்கூடாது. அத்துடன் அவர்கள் தீய அபிப்ராயங்களோடு பார்க்கக்கூடாது.

28. விவாதிக்கப்படும் விஷயம் இந்த நிரந்தர விதிமுறையை மீறிய செயல் என்று அவைத் தலைவர் கண்டு பிடித்தால், அவர் உடனடியாக விவாததத்தை நிறுத்தலாம். அத்துடன் அவைத் தலைவ்ர் அனைத்து பேராளர்களுக்கு அந்த குறிப்பிட்ட விஷயத்தை விவாதிக்க வேண்டாம் என்று கட்டளை இடலாம்.

29. ஒரு பேராளர் பேசும் போது மற்றொரு பேராளர் கீழ் காணும் விஷயங்களுக்காக மட்டுமே குறுக்கே பேசலாம்.

(a) ஒரு குறிப்பிட்ட விஷயத்தை பேராளர் பேசிக் கொண்டிருக்கும் போது மற்றொரு பேராளர் கூட்ட நடைமுறை பற்றிய விஷயத்தை பேச வேண்டும் என்று நினைத்தால் அந்த சமயத்தில் பேசிக்கொண்டிருக்கும் பேராளர் உட்கார வேண்டும். இடையே பேசிய பிரதிநிதி அந்த குறிப்பிட்ட விஷயத்தை விளக்கி அனைவரின் கவனத்தை தன் பக்கம் திருப்ப வேண்டும். பின்பு அந்த விஷயம் குறித்து முடிவு எடுக்க அவ் அவைத் தலைவரிடம் விட்டுவிட வேண்டும்.

(b) ஆ.ஒரு குறிப்பிட்ட விஷயம் குறித்து விளக்கம் பெற வேண்டும் என்றால், பேசிக்கொண்டிருக்கும் பிரதிநிதி அவருக்கு வழிவிட்டு உட்கார வேண்டும். பின்பு குருக்கே பேசிய அந்த பிரதிநிதியை அவைத் தலைவர் பேச அழைக்கலாம்.

30. அவைத் தலைவர், பேராளர்களை கூட்ட விதிமுறையை அல்லது விவாதம் நடக்கும் சமயத்தில் திருத்த முற்படும் போது, உரை நிகழ்த்திக்கொண்டிருக்கும் பேராளர் அமைதியாக அமர்ந்து கேட்க வேண்டும். பேரவை / மாநாடு முற்றிலும் அமைதியாக இருந்தால், அவைத் தலைவர் தெளிவாக தமது உரையை நிகழ்த்தலாம்.

31. பேரவை / மாநாடு நடைபெறும் தருவாயில் :

(a) கூட்டம் நடைபெறும் இடத்தில் நுழையும் மற்றும் வெளியேறும் போதும் அனைத்து பேராளர்கள் / பார்வையாளர்கள் மிகவும் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். முக்கியமாக அமைதியாக நுழைந்து வெளியேற வேண்டும்.

(b) பேராளர்கள் / பார்யையாளர்கள் தங்கள் இஷ்டப்படி கூட்டம் நடக்கும் இடத்தை கடந்து செல்லக்கூடாது.

(c) அனைத்து பிரதிநிதி / பார்வையாளர்கள் நாளேடுகள், புத்தகங்கள் மற்றும் வேறு பத்திரங்களை வாசிக்க கூடாது. அவர்கள் விவாதிக்கப்படும் விஷயங்கள் குறித்தப் பத்திரங்கள் மட்டுமே வாசிக்க முடியும்.

(d) பேராளர்கள்/பார்வையாளர்கள் கூட்டம் நடைபெறும் மண்டபத்துக்குள் புகைப்பிடிக்கக்கூடாது.

(e) ஒரு பேராளர் உரை நிகழ்த்தும் போது அனைவரும் அமைதியாக இருந்து அந்த உரையை செவிமடுக்க வேண்டும். இஷ்டம் போல் குறுக்கே பேசக்கூடாது.

(f) பேராளர்கள் / பார்வையாளர்கள் பேரவை / மாநாட்டை பதிவு செய்யக்கூடாது. ஆனாலும், அவர் முன்கூட்டியே

அவைத் தலைவரிடம் அனுமதி பெற்றிருந்தால் மட்டுமே பதிவு செய்யலாம்.

32. பேரவை / மாநாட்டில் கலந்து கொள்ளும் பேராளர்கள் / பார்வையாளர் மற்ற உறுப்பினர் அல்லது கட்சியின் சட்டத்திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படாத எந்த ஒரு பிரிவையும் அவைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுந்த ஆதாரம் இல்லாமல் குறைக் கூறக் கூடாது.

33. பிரதிநிகள் / பார்வையாளர்கள் பேரவை/ மாநாட்டின் அனைத்து விதிமுறைகளை பின்பற்றுவதை அவைத் தலைவர் உறுதி செய்ய வேண்டும். இது குறித்து அவைத் தலைவர் எடுக்கும் எந்த ஒரு முடிவையும் பேரவை / மாநாடு மேல்பார்வை அல்லது குறை காண முடியாது. அவைத் தலைவர் முடிவின் மீது ஒரு எழுத்துப்பூர்வமான பரிந்துரை மேற்கொள்ளப்பட்டால், அது குறித்து பேரவை / மாநாடு முடிவு எடுக்க வாய்ப்பு உள்ளது.

## அவைத் தலைவரின் முடிவு

34. அவைத் தலைவர் ஒரு குறிப்பிட்ட பேராளரின் உரையில் பேரவை / மாநாடு கூட்டத்திற்கு சம்பந்தம் இல்லாத விஷயத்தில் விவாதித்தல் அல்லது தனது பரிந்துரையை பல தடவை திரும்ப திரும்ப கூறினால் அல்லது வேறு ஒரு பேராளரின் பரிந்துரையை தமது உரையின் பயன்படுத்தினால், அப்பிரதிநிதியின் உரையை நிறுத்த அவைத் தலைவர் உத்தரவு வழங்கலாம். இந்த உத்தரவானது பல முறை அவைத் தலைவர் பேரவை / மாநாட்டின் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டிய பின்பு தான் அவர் எடுக்க வேண்டும்.

35. பேராளர்கள் விவாதித்த விஷயங்களில் ஆழமான கருத்து இல்லை என்றால் அவைத் தலைவர் விவாதத்தை நிறுத்தி வாக்கெடுப்பை எடுக்கும் முழு அதிகாரம் உள்ளது.

36. ஒரு குறிப்பிட்ட பேராளர் / பார்வையாளர் பேரவை / மாநாட்டில் முறை தவறி நடந்துக் கொண்டாலோ அல்லது அவைத் தலைவரின் கட்டளையை மீறினாலோ, அவர் உடனடியாக பேரவை / மாநாடு நடைபெரும் இடத்திலிருந்து வெளியேற்றப்படுவார். அவர் குறிப்பிட்ட கூட்டத் தொடர் முடியும் வரை அனைத்து பேராளர்கள் / பார்வையாளர்களின் சம்மதமின்றி மண்டபத்திற்குள் நுழைய முடியாது. இந்த விதிமுறை முறையாக நிறைவேற்றப்பட, அவைத் தலைவர் சந்தேகம் ஏற்படும் அளவில் நடந்துக்கொள்ளும் எந்த ஒரு பேராளர் / பார்வையாளரிலிருந்து நீக்க முழு அதிகாரம் உள்ளது.

37. பேராளர்கள் / பார்வையாளர்கள் அவைத் தலைவரின் அனுமதியின்றி பேரவை / மாநாடு நடைபெறும் மண்டபத்திலிருந்து இருந்து வெளியேற முடியாது.

38. பேரவை / மாநாடு நடைபெறும் மண்டபத்தில் கட்டுப்பாட்டை மீறிய குழப்பம் அல்லது வரம்பு மீறிய தகராறு நடந்தால் அவைத் தலைவர் உடனடியாக விவாதத்தில் எந்தவொரு முடிவும் எடுக்காமால் பேரவை / மாநாட்டை வேறு ஒரு நாளுக்கு ஒத்தி வைக்கலாம்.

39. ஒரு பேராளர் / பார்வையாளர்களின் மேல் எடுக்கப்படும் எந்தவொரு முடிவும் இந்த பேரவை / மாநாட்டின் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

## வாக்கெடுப்பு

40. பேரவை / மாநாட்டில் வாக்கெடுப்பு முறையை பயன்படுத்தி முடிவு செய்ய வேண்டும் என்றிருந்தால், கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்குகள் எண்ணப்படும். ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்கு வாக்குகள் சமமாக இருந்தால், அந்த குறிப்பிட்ட விஷயம் நிராகரிக்கப்படும். ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டால், அவைத் தலைவர் தமது முடிவை மாற்றலாம். ஆகவே, அவைத் தலைவர் கைகளை உயர்த்தும் முறையில் ஒரு விஷயம் குறித்து எடுக்கும் முடிவு இறுதியான முடிவாகும்.

41. ஒரு குறிப்பிட்ட பேராளர் ரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அவைத் தலைவரிடம் பரிந்துரை செய்யலாம். அந்த பரிந்துரையை அவைத் தலைவர் மற்ற பேராளர்களிடமிருந்து ஆதரவு பெற்றால் மட்டுமே அதனை குறித்து முடிவு செய்ய முடியும்.

42. ரகசிய வாக்கெடுப்பு குறித்து பரிந்துரையை விவாததிற்கு கொண்டு செல்லும் முன்பே மீட்டுக்கொள்ள பேராளர்க்கு உரிமை உள்ளது.

43. கட்சியின் தேசியப் பேரவையில் கலந்து கொள்ளும் அனைத்து பேராளர்களுக்கும் கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் தேர்தலில் போட்டியிடும் உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் வழங்கப்படும்.

44. கட்சியின் மத்திய உயர்நிலைச் செயற்குழு தேர்தல் நடைபெறும் மண்டபத்திற்கு வரும் அனைத்து பேராளர்களுக்கும் ஒரு வாக்கெடுப்பு சீட்டு வழங்கப்படும். அதில் அவர்கள் மத்திய உயர்நிலைச் செயற்குழுவில் இடம்பெறப் போகும் 20 உறுப்பினர்களை தேர்ந்து எடுக்க வேண்டும்.

45. இருபது பேருக்கு குறைவான அல்லது கூடுதலான உறுப்பினர் எண்ணிக்கையைத் தேர்ந்து எடுத்த பேராளர்களின் வாக்கு சீட்டுகள் நிராகரிக்கப்படும்.

46. புதிய மத்திய உயர்நிலைச் செயற்குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்து எடுக்க கட்சியின் சிறப்புப் பேரவை நடத்தப்பட்டால், விதிமுறைகள் 43, 44 மற்றும் 45 ஆகியவைகளை முழுமையாக கடைப்பிடித்தல் அவசியம்.

47. ப்ரோக்சி(proxy) முறையில் வாக்களித்தல் அனுமதிக்கப்படாது.

48. பார்வையாளர்கள் எந்த ஒரு பரிந்துரைக்கும் வாக்களிக்க அனுமதி இல்லை.

49. கட்சியின் பேரவை / மாநாடு தொடங்கும் முன், அவைத் தலைவர் வாக்குகள் எண்ணுபவர்களை நியமிக்க வேண்டும்.

## நிரந்தர விதிமுறைகள் தடை

50. பேரவை / மாநாட்டின் நிரந்தர விதிமுறையின் ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது முழுவதையும் தடை விதிப்பதற்கு அனைத்து பேராளர்களும் முழு மனதாக ஒப்புக் கொண்ட பின்பு முடிவு செய்யப்படும்.

## பொது

51. துணை அவைத் தலைவர், அவைத் தலைவர் சார்பில் பணிகளை நடத்தும்போது, அவருக்கு அவைத் தலைவரின் முழு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

52. அவைத் தலைவர் மற்றும் துணை அவைத் தலைவர்களை ‘அவைத் தலைவர் சகோதர / சகோதரிகள்’ என்றே அழைக்க வேண்டும்.

53. ‘பேராளர்கள்’ என்ற வார்த்தை பார்வையாளர்களுக்கும் உட்பட்டதுதான்.

54. நிரந்தர விதிமுறைகளை கட்சியின் சிறப்புப் பேரவையிலும் சில குறிப்பிட்ட திருத்தங்களைச் செய்து பயன்படுத்த வேண்டும்.

*(இந்த அரசியலமைப்பில் 25.09.2022 நடைப்பெற்ற கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களை சங்கங்கள் பதிவு துறை 01.11.2022-இல் ஒப்புதல் தெரிவித்தது.)*